Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 12 ஆம் நாள் ஷவ்வால் 28 (25-3-63) திங்கட்கிழமை இதழ் 45

# வீரர் ஆனந்தனுக்கு வல்வையில் வரவேற்பு

## அதிர்வேட்டுகள் பூரணகும்பங்கள், பாராட்டுகள், பரிசளிப்புகள்

### ஆடவரும் அரிவையரும் கண்டுகளித்த கோலாகலமான வைபவம்

(நமது விசேஷ நிருபர்)

வல்வெட்டித்துறை, திங்கள்

சமுத்திர ராஜனை வெற்றி கொண்ட ஈழத்து வாலிப நீச்சல் வீரன் ஆனந்தனை ஈழ மாதா அகமும் முகம் மலர நேற்று மாலை 5 மணி 10 நிமிஷத்திற்கு வரவேற்று உச்சி மோந்த காட்சி ஈழத்தமிழர் சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டியதே. ஈழத்திருநாட்டில் சமீபகாலத்தில் கண்டிருக்க முடியாத பெரும் வீர விழாவாகவே அக் காட்சி அமைந்தது.

மிகவும் திடகாத்திரமாகவும் சாதுரியமாகவும் சமுத்திர ராஜனை வெற்றி கொண்ட ஆனந்தனைக் காண நேற்று நண்பகலிருந்து வல்வெட்டித்துறையில் மக்கள் கூடத்தொடங்கி விட்டனர்.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. சமுத்திர அலைகள் கரையில் நின்ற மக்களின் கால்களைத் தழுவியது. எங்கும் மகரதோரணங்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் ஜன சமுத்திரமாகக் கூடிநின்றனர்.

தென்றல் தவழ்ந்து வந்த வேளையிலே 'படீர்' என்ற வெடிச்சத்தம் கேட்டது. கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஆனந்தன் வந்து கொண்டிருக்கிறார் என்றுஒலிபெருக்கி அலறியது வருணபகவானும் இவ்வீரவிழாவைக்கண்டு ஆனந்த மாரி பொழிந்தார்.

மாலை 5 மணி பத்து நிமிஷங்கள். ஆனந்தனுக்கு ஜே! என்ற கோஷம் வானைப்பிளக்க வெடிகள் வெடித்து புகை மண்டலம் எழுப்ப இளைஞர்கள் மத்தியிலே வீர இளைஞன் ஆனந்தன் புன்முறுவலுடன் கரை வந்து சேர்ந்தார். வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. சபாரத்தினம் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் முதலில் மாலைகள் சூட்டி ஆனந்தனைவரவேற்றனர். தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்னம், உடுப்பிட்டி எம். பி திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை நீதிபதி திரு. அப்துல் காதர் உட்படப்பலர் ஆனந்தனைக் கரையிலிருந்து அழைத்துச் சென்றுமேடையில் இருத்தினர்.

#### இரத்தத்தில் திலகமிட்டார்

மேடையில் வீற்றிருந்த செல்வகுமாரன் ஆனந்தன் கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் வெள்ளை நிற சேட்டும் அணிந்திருந்தார். வெள்ளை, சிகப்பு, மஞ்சள், பஞ்சை நிறங்களான பூமாலைகளும், பதக்கங்களும், தோடம்பழ, சாக்லெட் மாலைகளும் ஆனந்தனின் கழுத்தை அலங்கரித்தன. எவ்வித களைப்புமின்றி மிகுந்த உற்சாகத்துடன் ஆனந்தன் காணப்பட்டார். இளைஞர் ஒருவர் தமது கையைக் கீறி அதிலிருந்து பீறிய இரத்தத்தால் ஆனந்தனின் நெற்றியில் திலகமிட்டார்.

நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா பாராட்டு விழாவிற்கு தலைமை வகித்துப்பேசுகையில் கூறியதாவது:

வீரர்களுக்கு வீரர்கள் வணக்கஞ் செய்வர் உரோம காலத்திலே கூட வீரர்களுக்கு மாலை சூட்டி வரவேற்கும் வழமை இருந்திருக்கிறது.

கரையோர மக்களால் நாட்டுக்கு நன்மை கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களால் கப்பலோட்டி நாட்டிற்குத் தேவையானபொருள்களை இறக்குமதி செய்தும் ஏற்றுமதி செய்தும் நன்மை செய்ய முடியும்.

'கப்பலோட்டிய தமிழன்' மரபில் உதித்த தமிழ் மக்களிடையே பெருந்தன்மை இருக்கவேண்டும். தமிழனுக்குத் தமிழன் நஷ்டம் செய்வதினாலே அழிவு ஏற்படுகிறது. நானும் வாழவேண்டும் மற்றவனும் வாழ வேண்டும் என்ற எண்ணம் உருவாகவேண்டும். ஆனந்தன் தனது விடாமுயற்சியினால் நம் அனைவருக்கும பெருமை தேடித்தந்துவிட்டார்.

உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கம் எமக்கும் தாயகத்திற்குமிடையே கலாசார சுவரை எழுப்ப முயற்சிக்கும் வேளையில் அதனைத் தகர்த்த பெருமை ஆனந்தனுக்கே உரியது.

ஆனந்தன் காட்டிய பாதையைப் பின்பற்றி நமது இளைஞர்கள் பல் வேறு துறைகளிலும் ஈடுபட்டு வெற்றிகாண வேண்டும். ஆனந்தனைப் போன்ற இளைஞர்கள் நம்மிடையே இருக்கும்வரை அரசாங்கம் எம்மைப்பிரிக்க முடியாது.

(8-ம் பக்கம் பார்க்க)

## 'யாழ்தேவி' இல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்பிலிருந்து நேற்று பிற்பகல் புறப்பட்டு நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேரவேண்டியிருந்த 'உத்தரதேவி' நேற்றுவரவில்லை இந்த சேவை ரத்துச்செய்யப்பட்டது. இன்றுகாலை கொழும்பிலிருந்து புறப்பட்டு இன்று நண்பகல் இங்குவந்துசேரவேண்டிய 'யாழ்தேவியும்' வரமாட்டாது. டீசல் என்ஜின் செட்டில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்ததாகவும் இதுவே அதற்குக் காரணமென்றும் கூறப்படுகிறது.

## இன்று

வண்ணை சிவன்கோவில் 6-ம் திருவிழா மாலை 6 மணிமுதல் முத்தமிழ் மணி ஸ்ரீ வி. எஸ். எஸ். மணிபாகதர் 'குமரகுருபரர்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## நீச்சல் வீரர் ஆனந்தன்

### எஸ். ஜே. வி., கவர்னர் ஜெனரல் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

'ஆனந்தனின் வீரச்செயல் எம்மையே பெருமைகொள்ளச் செய்துவிட்டது' என்று தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆனந்தனின் வீரச் செயலைப் பாராட்டி அனுப்பிவைத்துள்ள செய்தியில் குறிப்பிட்டார். பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த ஆனந்தனின் தீரத்தைப் பாராட்டிப் பல பிரமுகர்களும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா, ஆனந்தனின் வீரச் செயலைப் பாராட்டிச் செய்திஒன்று அனுப்பியுள்ளார்.

தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி.யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் அனுப்பியுள்ள செய்தியில் மட்டக்களப்பு மக்கள் ஆனந்தனின் வீரச் செயலைப் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் பாராட்டுச் செய்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

சர்வகலாசாலை சோஷலிஸ்ட் சங்கம், கந்தரோடை சனசமூக நிலையம், யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். மாவட்ட கிராம சேவகர்கள் சங்கம் என்பனவும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தன. தனிப்பட்டவர்களின் வாழ்த்துச் செய்திகளும் ஏராளமாகக் கிடைத்திருந்தன.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ்பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை.

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீட்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்

## காணி எடுத்தற்சட்டம் (அத்தியாயம் 460)
### 7-ம் பிரிவின் படியான அறிவித்தல்

கடித இலக்கம்: எல். டி. 3997

கீழிருக்கும் அட்டவணையில் குறிப்பிட்ட காணியை காணி எடுத்தற் சட்டத்தின்கீழ் எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை இத்தால் பிரகடனப் படுத்தப்படுகிறது. முழு விபரங்களையும் 22-3-63 திகதியில் வெளியான 13570 இலக்க அரசாங்க வர்த்தமானிப்பத்திரிகை (3-ம் பாகம்)யில் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டப்பிரிவு:- மட்டக்களப்பு.
கிராமத்தின் பெயர்:- தேத்தாத்தீவு.
பட இலக்கம்:- A 1425-ம் ஆரம்பப் படம்.
துண்டுகள் இலக்கம்:- 1.
காணியின் பெயர்:- பனிச்சையடி வயல்.

சி. லுடிக்கின்ஸ்
அரசாங்க அதிபரும்
காணி எடுத்தல் அதிகாரியும்,
மட்டக்களப்பு மாவட்டம்.



## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## ஸ்கந்தபுரம்–கிளிநொச்சி
### ஸ்டோர் கீப்பர் நியமனம்

மேற்படி சங்க பண்டகசாலையில் ஸ்டோர் கீப்பராய் தற்காலிகமாய்க் கடமையாற்றுவதற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 28-3-63-க்கு முன் மேற்படி சங்கத் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பக்காரர் தமது செலவில் நேர்முகப் பரீட்சைக்கு ஏற்படவேண்டி வரும்.

**தகுதிகள்**

1. கூட்டுறவுப் பயிற்சிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும் அல்லது பண்டகசாலைகளில் 2 வருடம் கடமையாற்றி அனுபவம் இருக்கவேண்டும்.
2. ரூபா 500-00 ரொக்கப் பிணையும் ரூபா 1000-00 பெறுமதியான ஆதனப் பிணையும் கட்டவேண்டும்.
3. இந்நியமனம் 6 மாத காலங்களுக்கு மட்டுமாகும்.
4. இரு நற்சாட்சிப் பத்திரங்கள்பெற்றவராய் இருக்கவேண்டும்.
5. மாதம் ரூபா 125-00 (எல்லாம் சேர்த்து) சம்பளமாகக் கொடுக்கப்படும்.

ம. மார்க்கண்டன்
தலைவர்

ப. நோ. கூ. சங்கம்,
ஸ்கந்தபுரம்
22-3-6



## வரி விளம்பரம்

**கடை வாடகைக்கு**

ஸ்டான்லிவீதி மொம்சாக் கட்டிடத்தில் உள்ள No. 11/5 கடை மேல்மாடி வாடகைக்கு உண்டு. வாடகை ரூபா 50. விபரங்களுக்கு: வே. கு. இராசரத்தினம், 11/5 மொம்சாக் கட்டிடம், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 806

**கோழி வளர்ப்போர்க்கு ஒரு நற்செய்தி**

60 சதவீதம்ஒருநாட்கோழிக் குஞ்சுகள் சனி, ஞாயிறுகளில் விற்கப்படும். சி. விக்கினராஜா, 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 805

**தொய்வு: நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**வியாபாரம்பெருக விளம்பரம்செய்க**


# சோவியத்யூனியனுடன் இலங்கையை ஒப்பிடலாமா?
## சோவியத் பேராசிரியருக்கு ராஜரத்தின கடிதம்

கொழும்பு, ஞாயிறு

"சோவியத் யூனியனுடன் இலங்கையை ஒப்பிடுவது தவறு. சோவியத் குடியரசின் ஒரு ராஜ்யத்துடன் தான் ஒப்பிட்டுப் பேசலாம். ஏனெனில் சோவியத் யூனியன் சமஷ்டி அரசியல் அமைப்பைக் கொண்டது. இலங்கையோ ஒற்றையாட்சி அமைப்பைக் கொண்டதாகும்' என்று வெலிமடை எம். பி.யும் ஜாதிக விமுக்திப் பெரமுனை தலைவருமான திரு. கே. எம். பி. ராஜரத்தின இலங்கையிலுள்ள சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜாக்கோவுக்கு எழுதியுள்ள ஒருகடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் ஜாக்கோவ் நிகழ்த்தியஒருசொற்பொழிவில் சோவியத் யூனியனில் அரசாங்க மொழி என ஒன்று இல்லையெனக் குறிப்பிட்டது சம்பந்தமாக திரு. ராஜரத்தின தமது கடிதத்தில் பதிலளித்துள்ளார்.

திரு. ராஜரத்தின தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

1917-ம் ஆண்டுக்கு முன் ரஷ்யாவில் தேசிய சிறுபான்மையினர் ஒடுக்கப்பட்டு வந்தனர். இது இலங்கையிலிருந்த நிலைக்கு எதிர்மாறானது. இலங்கையில் தேசிய சிறுபான்மையினரான தமிழர்களினால் சிங்களச் சமூகம் கஷ்டமடைந்தது. இந்தநாட்டின் சமூகமான சிங்களச் சமூகம் சிறுபான்மைச் சமூகமாகவும் சிறுபான்மை இனமான தமிழர் இந்த நாட்டின் சமூகமாகவும் அந்தஸ்துப் பெற்றது. 1917-ம் ஆண்டுக்கு முன் ரஷ்யாவை ரஷ்ய ஏகாதிபத்தியவாதிகள் ஆட்சி செய்தனர். ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் மொழியை இதரமக்கள்மீது திணித்தனர். இலங்கையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இலங்கை மக்கள்மீது தங்கள் மொழியைத் திணித்தனர். ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களம் அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்று இலங்கை மக்கள் விரும்புகின்றனர். சம அந்தஸ்துக் கேட்பவர்கள் இலங்கையில் ஆங்கிலத்தை எப்போதும் நிரந்தரமாக வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். சோவியத் யூனியனில் உயர் கல்வியும் உயர்பதவியும் பெறுவதற்காக கஸாக் மக்கள் அல்லது மற்றவர்கள் ரஷ்யமொழியைக் கற்கவில்லையா?

சோவியத் யூனியனில் எப்படி மொழிப்பிரச்னை தீர்க்கப்பட்டதென்பதை நான் எனக்குத் தெரிந்தவற்றை தெளிவாக்கிக் கொண்டேன்.

கஸாக்ஸ்தானில் கஸாக் மொழி ஒரே அரசாங்க (பொது) மொழியாக்கப்பட்டதுபோல் எங்கள் நாட்டிலும் சிங்கள மொழிதான் ஒரே அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்று தேசாபிமானமுள்ள எமது மக்கள் விரும்புகின்றனர்.

## உடுப்பிட்டி கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

உடுப்பிட்டி கிராமசபைத் தேர்தல் அடுத்தமாதம் 3, 4-ம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கிராமசபையின் ஒவ்வொரு வட்டாரத்திலும் பலத்த போட்டியிருக்கிறது. அபேட்சகர்கள் ஆதரவுதேடி இரவு பகலாகப் பிரசாரம் செய்துவருகின்றனர்.

## இயக்கச்சியில் யானைகள்
### நெற்சூடுகளை அழித்தன

யாழ்ப்பாணம், திங்கள்

இயக்கச்சி வண்ணன்கேணி என்னுமிடத்தில் திரு. ந. கார்த்திகேசு என்பவருக்குச் சொந்தமான 11 நெற்சூடுகளை எட்டு யானைகள் கூட்டமாகச்சென்று அழித்துவிட்டன. சனிக்கிழமையிரவு நடைபெற்ற இச்சம்பவம் திரு. கார்த்திகேசுவின் வீட்டுக்கருகாமையில் நடைபெற்றுள்ளது. யானைகள் நெற்சூடுகளை அழித்துக்கொண்டிருந்ததனை வீட்டிலுள்ளவர்கள்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

யானைகள் ஏற்படுத்தியசேதத்தை பனைக் காரியாதிகாரி பார்வையிட்டார்.

## புதுடில்லியில் மலனேஸ்கி

புதுடில்லி, மார்ச் 24

சோவியத் பாதுகாப்பு மந்திரி மலனேஸ்கி இந்தோனேஷியாவுக்குச் செல்லும் வழியில் இன்று புதுடில்லியில் சற்றுத் தங்கியிருந்தார்.

பாதுகாப்பு மந்திரி மலோனேஸ்கி பாலம் விமானநிலையத்தில் வந்திறங்கிய சமயம் அவரை இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் முப்படைத் தலைவர்கள் வெளிநாட்டு ஸ்தானிகர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

பாலம் விமான நிலையத்தில் ாசாவியத் பாதுகாப்பு மந்திரி மலனேஸ்கி பேசுகையில் சோவியத் மக்களிடமிருந்து பாரத மக்களுக்கு நல்லாசி கொண்டு வந்திருக்கின்றேன் என்று கூறினார்.

## நினைவு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

குரும்பசிட்டி சன்மார்க்க சபை 'ஈழகேசரி' பொன்னையா நினைவு விழாவை வருகிற சனிக்கிழமை விரிவாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துவருகிறது.

காலையில் பேச்சுப் போட்டியும், மாலையில் பரிசளிப்பு விழா இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்க கருத்தரங்கம் கலைவிழா என்பனவும் நடைபெற விருக்கின்றன.

## பீடி இறக்குமதி அனுமதி
### தயாரிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த சில வருடங்களாக அரசாங்கம் இந்தியாவிலிருந்து பீடி இறக்குமதிசெய்வதற்கு விதித்த தடையை சமீபத்தில் நீக்கியது காரணமாக உள்ளூர் பீடித் தொழில் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் உள்ள பீடித் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குதமது வேலையை இழக்கக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது.

இலங்கையிலுள்ள பீடி புகைப்பவர்கள் இந்திய பீடிகளையே பெரிதும் விரும்பிப் புகைக்கின்றனர். பீடி இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட போதும்கூட இங்குள்ளவர்கள் உள்ளூர் பீடியை புகைப்பதில் சிரிது கஷ்டமடைந்தனர். இருப்பினும் இங்கு உற்பத்தி செய்த பீடிகளையும் புகத்தனர் இலங்கையில் பல பீடித் தொழிற்சாலைகள் உருவாகின.

தற்போது அரசாங்கம் விதித்த தடையை நீக்கியதும் உள்ளூர் பீடிகளை உபயோகித்து வந்தவர்க்ள் மீண்டும் இந்திய பீடிகளை விரும்பிப் புகைக்க ஆரம்பித்துவிட்டனர் இதனால் கடைகளில் ஏராளமான உள்ளூர் பீடிகள் பெருமளவு தேங்கியுள்ளன.


## வீடு வாடகை|விற்பனை, காணி குத்தகை|விற்பனை, பொருள்கள் வாங்க|விற்க இலகுவான வழி.

### ஈழநாடு சிறு விளம்பர விகிதங்கள்

**விளம்பரப் பிரிவுகள்**

**பிரிவு 1.**
பிறப்பு, இறப்பு, திருமணம், அழைப்பிதழ், வாழ்த்து, அனுதாப விளம்பரம், தனிப்பட்டவிஷயம், பொருள்களைக் காணவில்லை, பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன முதலியன.

பி. கு. திருமண விளம்பரமாயின், மணமக்களது கையொப்பமும், இறப்பு விளம்பரமாயின் இறந்தவரது உரிமையாளரின் கையொப்பமும் தேவை.

**பிரிவு 2.**
வேலை தேவை, வேலை காலி, விளையாட்டு வகுப்புகள், டியூசன், வர்த்தக வகுப்புகள், நடன வகுப்புகள், புத்தகங்கள், சாஸ்திரம் முதலியன.

**பிரிவு 3.**
வீடு வாடகைக்கு, விற்பனைக்கு, காணி குத்தகைக்கு, விற்பனைக்கு, வீடும் சொத்தும், தங்குமிடவசதி, தோட்டம் முதலியன.

**பிரிவு 4.**
தாவர உற்பத்திகள், தெங்குப் பொருள்கள், கோழிப் பண்ணை, கால்நடை, செடிகள், விதைகள், உரம் முதலியன.

**பிரிவு 5.**
சைக்கிள், மோட்டார் சைககிள், வானொலிப்பெட்டி, கடிகாரம், தையல் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மோட்டார் உறுப்புகள், கார்கள், லொறிகள், புகைப்படச் சாதனங்கள், தட்டெழுத்துப் பொறிகள், அலுவலக உபகரணங்கள், எஸ்டேட் சப்ளைஸ், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள். டிராக்டர்கள், றெயிலர்கள், கட்டிடச் சாமான்கள் முதலியன.

**பிரிவு 6.**
வைத்தியம், மருந்துகளும் மூலிகைகளும், மருத்துவம் முதலியன.

**பிரிவு 7.**
வர்த்தக அறிவித்தல்கள், பணவசதி, ஈட்டுக்குப் பணம், வியாபார ஸ்தலங்கள் முதலியன.

**பிரிவு 8.**
ஆபரணங்கள், இசைக்கருவிகள், அழகுக்கலை முதலியன.

ரூ. 50க்குக் குறைந்த பெறுமதியான பொருள்களின் விளம்பரங்களாயின், முதல் 10 சொற்களுக்கும், ரூ. 2-00 வீதமும் அதற்குக் கூடுதலான ஒவ்வொரு சொற்களுக்கும், 10 வீதமும் அறவிடப்படும்.

விளம்பரத்தில் குறிப்பிடப்படாத விளம்பரதாரர்களின் பெயர்கள் எக்காரணம் கொண்டும் எம்மால் அறிவிக்கப்பட மாட்டாது.

'ஈழநாடு' மேற்பார்வையில் அமையும் விளம்பரங்களுக்கு நூற்றுக்கு 50 வீதம் வேறாக அறவிடப்படும்.

தபாற் பெட்டி எண் குறிப்பிட்ட விளம்பரங்களாயின் மேலதிகமாக 5 சொற்கள் கூட்டி எண்ணப்படும்.

| சொற்கள் | ஒருமுறை பிரசுரிக்க. | 3ம் க்கு மேற்பட்ட பிரசுரங்களுக்கு. வீதம் |
|---|---|---|
| 15 | ரூ. 3-50 | ரூ. 3-00 |
| 16 | 3-60 | 3-10 |
| 17 | 3-70 | 3-20 |
| 18 | 3-80 | 3-30 |
| 19 | 3-90 | 3-40 |
| 20 | 4-00 | 3-50 |
| 21 | 4-10 | 3-60 |
| 22 | 4-20 | 3-70 |
| 23 | 4-30 | 3-80 |
| 24 | 4-40 | 3-90 |
| 25 | 4-50 | 4-00 |
| 26 | 4-60 | 4-10 |
| 27 | 4-70 | 4-20 |
| 28 | 4-80 | 4-30 |
| 29 | 4-90 | 4-40 |
| 30 | 5-00 | 4-50 |
| 31 | 5-10 | 4-60 |
| 32 | 5-20 | 4-70 |
| 33 | 5-30 | 4-80 |
| 34 | 5-40 | 4 90 |
| 35 | 5-50 | 5-00 |
| 36 | 5-60 | 5-10 |
| 37 | 5-70 | 5-20 |
| 38 | 5-80 | 5-30 |
| 39 | 5-90 | 5-40 |
| 40 | 6-00 | 5-50 |

40க்கு மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 15.

# மீண்டும் தாக்குதல் நடத்த சீனா தயாராகிறது

## லோகசபையில் நேரு தகவல்

புதுடில்லி, மார்ச் 24

இந்தியாமீது மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கு சீனா தயார்செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறதென்றும் தனக்குச் சாதகமான சந்தர்ப்பத்தில் அது மீண்டும் தாக்குதல் நடத்தலாமென்றும் பிரதமர் நேரு நேற்று லோகசபையில் கூறினார். சீன-இந்திய எல்லையில் சீனர்கள் மீண்டும் துருப்புக்களைக் கொண்டுவந்து குவிப்பதிலிருந்தும் சீனா எழுதும் குறிப்புக்களின் ஆத்திரமூட்டும் தொனியிலிருந்தும் சீனா மீண்டும் தாக்குதல் நடத்தத் தயார்செய்கிறதென்பது தெளிவு என்று பிரதமர் நேரு கூறினார்.

சீன—இந்திய எல்லையில் சீனத்துருப்புக்கள் கொண்டுவந்து குவிக்கப்படுவதுபற்றி வெளிவந்த செய்திகள் பற்றி லோகசபையில் பன்னிரண்டு அங்கத்தவர்கள் கொண்டுவந்த கவனஈர்ப்புப் பிரேரணை சம்பந்தமாகப் பிரதமர் நேரு ஒரு அறிக்கை விடுத்தார்.

"திபெத்தில் சாலைகள் அமைத்துள்ள முறையிலும் நடப்புக்கட்டுப்பாட்டுக்கோடு என அவர்கள் கூறும் கோட்டிலிருந்து 12 மைல் தூரத்திற்கு அப்பால் அவர்கள் துருப்புக்களை மீண்டும் குவித்துவருவதிலிருந்தும் மீண்டும் தாக்குதலுக்குத் தயார்செய்துவருவதாக வேதோன்றுகிறது" என்று நேரு கூறினார்.

சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுபற்றி பிரதமர் குறிப்பிடுகையில் கொழும்பு மகாநாட்டு யோசனைகளை சீனா முழுவதுமாக நிபந்தனை எதுவுமின்றி ஏற்காதவரை நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறமுடியாது என்று கூறினார். சீனா சமாதானத்தை விரும்பினால்முதல் நடவடிக்கையாக கொழும்புயோசனைகளை அது ஏற்கவேண்டுமென்று அவர் கூறினார்.

# அணு ஆயுத தடை உடன்பாடு

## நம்பிக்கை குறைந்துவிட்டது என்கிறார் ஜனாதிபதி கென்னடி

வாஷிங்டன், மார்ச் 24

"அணுஆயுதத் தடை உடன்பாடு விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை மங்கிவிட்டது. அணுஆயுதங்களை 20 நாடுகளிடம் இருக்கக்கூடிய நிலவரம் தோன்றுவது மிகவும் அபாயகரமானது." என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடி நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறினார்.

அத்லாந்திக் ஒப்பந்த நாடுகள் மேமாதம் ஒட்டாவாவில் கூடஇருக்கின்றன. அதற்குள் பலதேச அணுஆயுதப்படை அமைப்பு விஷயமாக அபிவிருத்தி ஏற்படக்கூடும் என்றும் 1963-ம் ஆண்டில் வர்த்தக மந்தம் தலைதூக்காது என்றும் அவர் கூறினார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது: "நீர் மீது செல்லும் கப்பல்களில் போலாரிஸ் ஏவுகணைகளை பொருத்தி காபந்து செய்வது அமெரிக்காவின் பந்தோபஸ்துக்கு அவசியம் இல்லை. ஆனால் மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்புக்கு அது அவசியப்படலாம் என்று ஒரு அபிப்பிராயம் இருந்து வருகின்றது.

அமெரிக்காவின் பொருளாதார நிலைமை மிகச் சிறப்பானதாக இருந்துவந்த போதிலும், வரிகளைக் குறைத்தாக வேண்டும். வரிகளைக் குறைக்காவிட்டால் எதிர்காலத்தில் வர்த்தக மந்தம் தலைதூக்கிவிடும்.

அணுஆயுதத் தடை உடன்பாடு காணமுடியும் என்ற நம்பிக்கை இப்போதைக்குச்சற்று மங்கிவிட்டபோதிலும் ரஷ்யாவை வற்புறுத்தி உடன்பாடு காண்பதற்கு நாம் தொடர்ந்து பாடுபடுவோம்."

## பியருக்கு வரி

லக்னோ, மார்ச் 22

உத்திர பிரதேச ராஜ்யத்திலிருந்து வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பப்படும் பியர் பானத்தின்மீது தீர்வை விதிக்க உத்திர பிரதேச அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இதன்மூலம் ராஜ்ய அரசாங்கத்துக்கு ஒரு வருடத்துக்கு 5 லட்சம் ரூபா அதிகப்படியாக வருமானம் கிடைக்கும்.

## 4 மாடிக் கட்டிடத்தில் தீ விபத்து

வெலிங்டன், மார்ச் 24

பிலிப்ஸ் மின்சார கம்பெனியின் நான்குமாடிக் கட்டிடத்தில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக ஒரு லட்சம் ஸ்டார்லிங் பெறுமான சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தீயணைக்கும் படையினர் 90 நிமிட நேரம் போராடி தீயை அணைத்தபோதிலும், டெலிபிரிண்டர்கள், எக்ஸ்ரே சாதனங்கள் போன்ற விலைமதிப்புள்ள பொருள்கள் சேதமடைந்தன.

## சீனா முட்டுக்கட்டை

பெர்லின், மார்ச் 22

கிழக்கு ஜெர்மனியிலிருந்து கம்யூனிஸ்ட் நாடான வடக்கு வியட்னாமுக்கு விமான சேவை நடத்த கிழக்கு ஜெர்மன் திட்டமிட்டது. ஆனால் இத்திட்டம் அமுலுக்கு வராதபடி கம்யூனிஸ்ட் சீனா தடுத்துவிட்டதாக கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் வட்டாரத்தினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

கம்யூனிஸ்ட் சீனப்பகுதிமீது பறந்து வடக்கு வியட்னாமுக்குச் செல்ல கிழக்கு ஜெர்மன் விமானங்களுக்கு அனுமதி அளிக்க சீனா அனுமதி மறுத்துவிட்டது.

## உப ஜனாதிபதி ஸாகிர்ஹுசெயின் சூடான், எதியோப்பியா செல்கிறார்

பம்பாய், மார்ச் 24

ஐக்கிய அரபுக் குடியரசு, சூடான், எதியோப்பியா ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்வதற்காக இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகிர்ஹுசெயின் இன்று பம்பாயிலிருந்து புறப்பட்டார்.

புதுடில்லியிலிருந்து நேற்று மாலை பம்பாய் வந்துசேர்ந்த டாக்டர் ஸாகிர்ஹுசெயினை பம்பாய் கவர்னர் திருமதி விஜயலட்சுமி பண்டிட்டும் முதன் மந்திரி கண்ணன் வாரும் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

## தமிழ்ப் பள்ளியில் சேர ஆளில்லை

ஹைதராபாத், மார்ச் 21

சித்தூரிலுள்ள அரசினர் ஆதாரப பயிற்சிப் பள்ளியின் இரண்டாண்டு செகண்டரி பயிற்சி வகுப்புக்களில் சேர்ந்து படிக்க தமிழ் மாணவர்கள் யாரும் வரவில்லை. இந்த வகுப்புகள் அடுத்த ஆண்டும் மாணவர்கள் சேர்வதற்காக திறந்து வைக்கப்பெறும் என்று நம்பப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலுள்ள சிறுபான்மையினருக்கு அவர்களுடைய மொழியில் கல்வியளிப்பதற்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இதற்கிணங்க ஹைதராபாத்உட்பட ஆந்திர மாநிலத்தில் பல இடங்களில் தமிழர்களுக்கான பள்ளிகள் திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## மூழ்கிய கப்பல்களிலிருந்து இலட்சம் டன் இரும்பு

லண்டன், மார்ச் 22

இங்கிலாந்தில் உள்ள ஸ்கேப்பா ஃப்ளோ என்னுமிடத்தில் 1919-ல் மூழ்கச் செய்யப்பட்ட கடைசி ஏழு ஜெர்மானியப் போர்க் கப்பல்களைக் கடலிலிருந்து மீட்கப்போகிறார்கள்.

கிளாஸ்கோவிலுள்ள ஒரு நிறுவனம் இப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. இக் கப்பல்களுள் 25 ஆயிரம் டன் எடையுள்ள சண்டைக் கப்பல்களும், சிறுதரப் போர்க் கப்பல்களும் அடங்கியுள்ளன.

இவற்றிப்மூலம் 1 லட்சம் டன் பழைய இரும்பு கிடைக்குமென எதிர்பார்க்கிறார்கள். மூன்றுபேர் மூழ்கும் வேலையில் ஈடுபடுவர். பூராவாக எடுத்துமுடியப் பத்து ஆண்டுகள் ஆகும்.

## இந்து அறநிலைய போர்ட்டின்கீழ்நிலங்கள்

ஹைதராபாத், மார்ச் 22

ஆந்திரப் பிரதேசத்தின் பல பாகங்களிலுமுள்ள சுமார் 3.5 லட்சம் ஏகரா நிலங்கள் இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் நிர்வாகத்துக்கு வந்துள்ளன. தமிழ் நாட்டின் எல்லையை ஒட்டியுள்ள நெல்லூர் மாவட்டத்தில் மட்டும் 50 ஆயிரம் ஏகரா இத்துறையின் பரிபாலத்தின் கீழ் வந்திருக்கிறன.

# தமிழ் நாட்டுச் செய்திகள்

### பொலிஸ்படை

சென்னை, மார்ச் 24

நாட்டின் பல்வேறு திட்டங்கள் அமுல் நடத்தப்படுகின்றன. இதனால் பொலிஸாருக்கு வேலைகள் அதிகரித்துள்ளன. ஆகையினால் பொலிஸ்படை பலத்தை அதிகரிக்க வேண்டுமென்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். பாலகிருஷ்ணஷெட்டி தெரிவித்துள்ளார். மயிலாப்பூர் அகடமி, இந்திய அரசாங்க ஐந்தாண்டு திட்டப் பிரசார தகவல் பகுதி ஆகியவற்றின் ஆதரவில் நடைபெற்ற விவாத அரங்கில் பேசுகையிலேயே இன்ஸ்பெக்டர் ஜெனரல் மேற்கண்டவாறு கூறினார்.

⁂ ⁂ ⁂

### சிறுத்தை சுட்டுக் கொல்லப்பட்டது

காஞ்சிபுரம், மார்ச் 24

இங்கிருந்து 10 மைல் தூரத்திலுள்ள எலநகர் கிராமமக்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கிய 7 அடி 3 அங்குல நீளமுள்ள சிறுத்தையொன்று சுட்டுக் கொல்லப்பட்டது.

⁂ ⁂ ⁂

### செயற்கை மழை

சென்னை, மார்ச் 24

செயற்கை முறையில் மழையைப் பொழியவைக்கும்முகமாக, தமிழ்நாட்டு அரசாங்கம் நடத்திய பரிசோதனைகள் நல்ல பயனைக் கொடுத்திருப்பதால் இந்தப் பரிசோதனை இப்போது திருச்சி ஜில்லாவுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கல்சியம் குளோரைட (சாதாரணஉப்பு) சோடியம் குளோரைட் ஆகிய இருபொருள்களும் எரிக்கப்பட்டு இதிலிருந்து கிளம்பும் ,வாயு உயரமான 'புகைக்கூண்டு' மூலம் மேகங்களுக்குப் போய்ச் சேருகிறது. இது மேகங்களைக் 'கருவுறச்' செய்யும் முறை என்று கூறப்படுகிறது.

⁂ ⁂ ⁂

### பொற்கொல்லர் ஹர்த்தால்

திருச்சி, மார்ச் 24

திருச்சியிலுள்ள தங்க, வைர வியாபாரிகளும் பொற் கொல்லர்களும் செயற்கை வைரம் தீட்டுபவர்களுடன் சேர்ந்து, தங்கக் கட்டுப்பாடு உத்தரவை ஆடசேபித்து ஹர்த்தால் செய்தனர். பல்வேறு சங்கங்களையும் சேர்ந்த சுமார் 5000 பேர் ஊர்வலமாகச் சென்று முதன்மந்திரி திரு. காமராஜரிடம் தங்கள் குறைகளை முறையிட்டனர். திரு. காமராஜர் நகரில் முகாமிட்டிருந்தார்.

⁂ ⁂ ⁂

### 'மாற்றுவேலை வேண்டும்'

மதுரை, மார்ச் 24

வேலையிழந்த 3000 பொற்கொல்லர்கள், நகரவீதிகளில் எங்களுக்கு மாற்றுவேலை தருக என்று கோஷமிட்டுச் சென்றனர்,

## தாக்குதலை சமாளிக்க நடவடிக்கை

புதுடில்லி, மார்ச் 24

சீனா திடீரென்று விமானத் தாக்குதல் நடத்தினால் அதை சமாளிப்பதற்கு விமான ஓட்டப் பயிற்சியளிக்க இந்திய அரசாங்கம் ஒரு அவசரகாலத் திட்டம் வகுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

'மிக்' ரகபோர்விமானங்களை இந்தியாவில் உற்பத்திசெய்வதற்கு இந்தியாவில் அமைக்கப்படவிருக்கும் 'மிக்' விமானத் தொழிற்சாலைகள்பற்றி இந்திய பாதுகாப்பு அமைச்சுக்கு ஆலோசனை தெரிவிப்பதற்காக இந்தியாவுக்குவந்துள்ள சோவியத் நிபுணர்கள் இன்றுஅல்லது நாளை அவர்களுடையஅறிக்கையைச் சமர்ப்பிததுவிடுவார்கள்.

## 3 கோடி கடிதங்களைப் பிரித்து அனுப்பும் அஞ்சலகம்

லண்டன், மார்ச் 22

நாளொன்றுக்குச் சுமார் 3 கோடி கடிதங்கள், சிப்பங்கள் ஆகியவற்றை பிரித்துப் பல இடங்களுக்கு பிரிட்டன் அஞ்சலகம் அனுப்பி வைக்கிறது. இவற்றில் பல ஒரு தடவைக்கு மேல் பிரிக்கப்பட வேண்டியவை.

கையால் இவற்றைப் பிரிப்பதால் பல மணி நேரமாகிவிடுகிறது. அத்துடன் செலவும் மிகுதி. அதனால் தற்போது இவை யந்திரத்தால் பிரிக்கப்படுகின்றன.

இந்த யந்திரங்களும் இப்போது தானியங்களாக மாற்றப்பட்டுவிட்டன. இவற்றின் மூலம் 20000 கடிதங்களைப் பிரித்து எடுக்க முடியும்.

## தமக்குத் தாமே தீர்ப்பளிக்கும் மாணவர்

லண்டன், மார்ச் 22

இளம் பட்டப்படிப்புக்கு வரும் மாணவர்களின் குற்றங்களைத் தண்டிப்பதற்கென லெசெஸ்டர் பல்கலைக்கழக மாணவர்கள் தமக்குள்ளாகவே ஓர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவை அமைத்துக்கொள்ள விரும்புகின்றனர். தற்போது இந்த அதிகாரங்கள் பல்கலைக் கழக அதிகாரத்தில் உள்ளன. இவற்றைத் தமக்கே அளிக்குமாறு மாணவர்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தரை வேண்டியுள்ளனர்.

## "சுவர்க்கதை" படமாகிறது

பெர்லின், மார்ச் 20

பெர்லினை இரண்டாகப் பிரித்துநிற்கும் சுவரைவைத்து. மேற்கு ஜெர்மனி சினிமா தயாரிப்பாளர்கள் ஒரு படம் எடுக்கப்போகிறார்கள். கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த இளைஞன் பீட்டர் ஃபெச்சர் என்பவன் இச் சுவரின்மேல் சுட்டுக்கொல்லப்பட்டதையே வைத்து முழு நீளப்படம் ஆக்குகிறார்கள். இப் படம் "கெயின் 1762" என்ற தலைப்பில் உலகெங்கும் வெளியிடப்படும்.

## சீனாமீது யூகோ. புகார்

பெல்கிரேட்,மார்ச் 24

அணு ஆயுதத்துக்கு சீனாவழிகோலுகிறது என்று யூகோஸ்லேவிய வெளிவிவகார மந்திரி திரு. பொப்போவிச் நேற்றுக் குற்றம் சாட்டினார்.

உலக சமாதானத்துக்கும் சோஷலிஸத்துக்கும் சீனர்கள் தீங்கு செய்கிறார்கள் என்று திரு. பொப்போவிச் யூகோஸ்லேவிய பார்லிமெண்டில் பேசுகையில் கூறினார்.

## இந்திய ஜனாதிபதி ஜூன் 2-ந் திகதி வாஷிங்டன் சேர்வார்

புதுடில்லி, மார்ச் 24

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இவ்வருடம் ஜூன் மாதம் 2-ந் திகதி வாஷிங்டன் போய்ச் சேருவார். இரு தினங்கள் கென்னடியின் விருந்தினராக வாஷிங்டனில் தங்கியிருந்தபின் 11-ந் திகதிவரை அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

அமெரிக்காவிலிருந்து திரும்பும்பொழுது எலிஸபெத் ராணியின் அழைப்பிற்கிணங்க 12-ந் திகதி டாக்டர் ராதாகிருஷ்ணன் லண்டன் போய்ச் சேருவார்.

22 ந் திகதிவரை இங்கிலாந்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபின் 23-ந் திகதி இந்தியா திரும்பிவந்து சேருவார்.

### மணி வாக்கு

உணவும் உடையும் இன்றி தனி ஒருவரும் கூட சங்கடப்படாத முறையிலேயே இந்தியாவின், உலகின் பொருளாதார அமைப்புத்திட்டம் இருக்கவேண்டுமென்று கூறுவேன். கடவுளின் காற்றும் தண்ணீரும் போல, இவைஎல்லாருக்கும் தடையின்றி கிடைக்கவேண்டும்.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

EELANALU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
பங்குனி மீ 12 உ. (25-3-63)

## விலைவாசிகள் அதிகரிப்பு

உணவுப்பொருள்கள், துணிமணிகள் உள்ளிட்டு அநேகமாக எல்லா முக்கியப்பொருள்களின் விலைவாசிகளும் உயர்ந்து பொதுமக்கள் மிகவும் சங்கடப்படுகின்றார்கள். திடீரென விலைகள் இப்படி உயர்வானேன்? இறக்குமதி கட்டுப்பாடு அலங்கோலமும், பணவீக்கம் ஏற்படும் முறையில் அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கச் செய்வதும்தான் என்று எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி உள்ளிட்டு பலமெம்பர்களும் பார்லிமெண்ட் சபையில் சென்றவாரம் இடித்துக்கூறினார்கள்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கப்போவதாக தேர்தல் காலத்தில் உறுதியளித்தனர் அரசாங்கக் கட்சியினர். ஆனால் இன்றையநிலைமை, வாழ்க்கைச்செலவு குறைவதற்குபதில் மிகவும் அதிகரிக்கிறது. மார்க்கெட்டில் விலைகள் தாறுமாறாக உயர்கின்றன. நாட்டில் கைத்தொழில்களையும் விவசாயத்தையும் அபிவிருத்தி செய்யப்போவதாகச் சொல்லியும், நாட்டின் செலாவணியைப் பாதுகாக்கப்போவதாகவும் கூறியும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைக் கண்மூடித்தனமாக அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். பல பொருள்களின் இறக்குமதியை (அதுவும் தமிழர் வெகுவாகப் பாவிக்கும் வெல்லம், புளி, பெருங்காயம், சீயக்காய்ப்பொடி, காப்பிக் கொட்டை முதலிய பலவற்றை) திடீரென அடியோடு தடுத்துவிட்டதால். இவற்றின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன. ஜவுளி இறக்குமதிக் 'கோட்டா'வை மிகவும் குறைத்துவிட்டதால், துணிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, அவற்றின் விலைகளும் தாறுமாறாக உயர்ந்துள்ளன.

உள்நாட்டுக் கைத்தொழில்களையும், விவசாயத்தையும் அபிவிருத்திசெய்ய வேண்டியதுடன், நாட்டின் செலாவணியையும் பாதுகாக்கவேண்டியதுதான். ஆனால் விலைவாசிகள் உயராமலும், வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்காமலும், முக்கிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமலும் இவ்வித நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதேமுறை. ஆனால் அரசாங்க நடவடிக்கைகளால் விலைவாசிகள் பெரிதும் உயர்ந்து, பொதுமக்கள் பல சங்கடங்களுக்கு உள்ளாகியும் கூட, உள்நாட்டுக் கைத்தொழில்களோ, விவசாயமோ போதிய அபிவிருத்தி அடைந்ததாகத் தெரியவில்லை. உள்நாட்டில் தயாராகும் 'சைகிள் டியூப்புகள்' ரூ. $8\frac{1}{2}$ க்கு விற்கின்றனவென்றும் அவை இரண்டொரு மாதங்களுக்கே பாவிக்கமுடியாததாயும், இறக்குமதியான 'டியூப்பு'கள் மூன்றேகால் ரூபாயேயென்றும் அவை ஒன்பது மாதம் அல்லது ஒரு வருஷத்துக்கும் பாவிக்க முடிந்ததாயும், எட்டியாந்தோட்டை மெம்பர் கூறி' அரசாங்க கைத்தொழில் விவசாய அபிவிருத்தி சரிவர நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்காகவே 15 கோடி ரூபாய்க்கும் அதிக காகித நோட்டுகளை அச்சடித்து வெளியிடவேண்டியதாயிற்றென்று நிதிமந்திரி கூறினார். ஆனால் உண்மையில், ரூபாயின் மதிப்பு பெரிதும் குறைந்து பணவீக்கம் ஏற்பட்டு, பொதுமக்களுக்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பதுதான் கண்டபலன். எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கத்தயாராக இருந்தால் இன்னும் 15 அல்லது 20 வருடங்களில் தேசம் நன்கு அபிவிருத்தி அடையுமென்றும், சபையனைத்தும் தம்முடன் ஒத்துழைக்குமென்றே தாம் நம்புவதாகவும் கூறினார் நிதிஅமைச்சர். இதிலிருந்து அரசாங்கக் கட்சியால்மட்டும் இம்முக்கிய காரியம் முடியாதென்பதையும்' எல்லாகட்சிகளின் ஒத்துழைப்பும் அவசியம் வேண்டும் என்பதையும் நிதிமந்திரி உணர்ந்துள்ளது வெளியாகிறது.

தேசமக்களின் மேலான நன்மையை முன்னிட்டு, எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற இந்த அரசாங்கம் என்ன செய்யப்போகிறது? தேசிய அரசாங்கத்தை அமைத்து, நெருக்கடியான இந்த சமயத்தில் விலைவாசிகள் உயராமலு அபிவிருத்திவேலைகள் நடைபெறவும் வழிவகைகள் செய்யுமா? அரசியல் கட்சிப் போட்டிகள் மலிந்து, தேர்தலில் அதிக வாக்குகள் பெறுவதையே குறிக்கோளாக ஒவ்வொரு கட்சியும் கொள்ளும்வரை, நாட்டுக்கு விமோசனம் பிறப்பது சந்தேகம். தியாக புத்தியும், ஒத்துழைப்பும்தான் இதற்கு வழிகாட்டும். அவ்விதம் செய்ய அரசாங்கக் கட்சியினர் முன்வந்தால், விலைவாசிகள் குறையவும் நாட்டு மக்களின் கஷ்டம்தீர்ந்து, நாட்டுக்கு நல்ல காலம் பிறக்கவும்கூடும்.

# வங்கிகளை பர்மா தேசியமயமாக்கியதன் விளைவு

## வர்த்தக நடவடிக்கைகளில் மந்தம்

ரங்கூன், பர்மாவில் தனிப்பட்டவர்கள் நடத்திவந்த வங்கிகளை பர்மிய சர்க்கார் மின்னல் வேகத்தில் தேசியமாக்கியதைத் தொடர்ந்து ரங்கூன் வட்டாரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் மந்தநிலைமை ஏற்பட்டுள்ளது.

பாங்குகள் அனைத்தும் பர்மிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து இந்த பாங்குகளுக்கு ராணுவ அதிகாரிகளே நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். பர்மிய ராஜாங்க வங்கியைச்சேர்ந்த சிவில் அதிகாரிகளும் இவர்களுடன் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் சிலர் மேல்நாடுகளில் பயிற்சிபெற்றவர்கள். வங்கிகள் தேசியமாக்கப்பட்டபின்னர் வங்கி நடவடிக்கைகள் சாதாரணமாகவே நடைபெறுகின்றன. எனினும் இந்த வங்கிகள் புதுப் பொறுப்பு எதையும் ஏற்பதில்லை. ஒவ்வொரு வங்கியினுடைய பழைய விவகாரங்களைத் தீர்ப்பதற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பர்மிய அரசாங்கம் ஏற்கனவே ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம், அரிசி கொள்முதல், அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் ஆகியவற்றை தேசியமாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றைத் தொடர்ந்து வங்கிகளை தேசியமாக்கியதானது பர்மிய அரசாங்கம் கடந்த சமீபகாலமாக செய்துவரும் பொருளாதார மாறுதல்களில் மிகவும் புரட்சிகரமானதாகும்.

பர்மிய சர்க்கார் மேற்கொண்ட வங்கிகளில் 10 வங்கிகள் பர்மிய வங்கிகளாகும் இதைத்தவிர வெளிநாட்டவர். நடத்திவந்த 14 வங்கிகளையும் பர்மிய அரசாங்கம் மேற்கொண்டது. இவற்றில் ஐந்து இந்திய வங்கிகளாகும், மற்றும் 4 பிரிட்டிஷ் வங்கிகளாகும்.மேலும் பாகிஸ்தான் வங்கி ஒன்று டச்சு வங்கி ஒன்று, பர்மா,சிங்கப்பூர், மலாயா ஆகிய நாடுகளில் வாழும் கம்யூனிஸ்ட் அல்லாத சீனர்கள் நடத்திவந்த ஒரு வங்கி, சீனவுக்குச் சொந்தமான இரு வங்கிகள் ஆகியவற்றையும் பர்மிய சர்க்கார் மேற்கொண்டது.

"தனிப்பட்டவர்கள் நடத்திவந்த வங்கிகளுக்கு வருடா வருடம் 40 முதல்45 சத வீதம் வரை லாபம் கிடைத்து வந்தது. இவ்வளவு லாபம் கிடைக்கக்கூடிய தொழிலானது தனிப்பட்டவர்வசம் இருக்கக் கூடாது" என்று இந்த வங்கிகளை தேசியமாக்கியது குறித்து பர்மிய சர்க்கார் காரணம் கூறியுள்ளது.

கடந்த இரண்டாவது யுத்தத்துக்குப் பிறகு பர்மிய அரசாங்கத்துக்கும் வெளிநாட்டு வங்கிகளுக்கும் இடையேயான உறவு அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை. பரஸ்பர சந்தேகமே இதற்குக் காரணம். பர்மாவில் இருந்த நிச்சயமற்ற அரசியல் தன்மை, கிராமப்புறங்களில் இருந்த பாதுகாப்பின்மை ஆகியவற்றால் வெளிநாட்டு வங்கிகள் தங்களது தொழில் உற்சாகம் காட்டவில்லை. கடந்த 10 வருடங்களில் இந்திய வங்கிகள் தவிரமற்றவங்கிகள் தங்களதுதொழிலைவிஸ்தரிக்கவில்லை பர்மிய வர்த்தகர்களை வெளிநாட்டு வங்கிகள் மிகக்குறைவாக மதிப்பிட்டு போதிய உதவி அளிக்கவில்லை. ஆனால் வெளிநாட்டு வங்கிகள் பர்மாவில் வசிக்கும் தங்கள் நாட்டவருக்கே உதவிபுரிந்துவந்தன. தொழில் ரீதியில் இது சரியாக இருந்த போதிலும் அரசியல் ரீதியில் சரியானதாக இல்லை.

கடந்த யுத்தத்துக்குப் பிறகு ரங்கூனில் தனது வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பித்த வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு அதே வெளிநாட்டைச் சேர்ந்த வங்கி வரையற்ற கடன் உதவி அளித்ததால் மேற்படி கம்பனியின் மூலதனம் ஏறக்குறைய 100 மடங்கு அதிகரித்தது. அப்போது அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடு அவ்வளவு தீவிரமாக இல்லாமல் இருந்ததால் ஒரே வருடத்தில் மட்டும் இக் கம்பனி தனது ஆரம்ப மூலதனத்தைவிட இரண்டு மடங்கு லாபத்தை தனது நாட்டுக்கு அனுப்பியது.

கம்யூனிஸ்டு சீனவுக்குச் சொந்தமான வங்கிகளோ பெரும் அளவில் தங்கள் தொழிலை நடத்தியபோதிலும் இது வர்த்தக ரீதியில் அல்லாமல் அரசியல் பிரசார அடிப்படையிலேயேநடத்தப்பட்டது. இந்த வங்கிகள் சீனர்களுக்கு எந்தவித உத்தரவாதமும் இன்றி தாராளமாக கடன்வசதி அளித்தன. கம்யூனிஸ்டு சீன ஆதரவாளராக இருந்தால் போதும், கடன் உதவி கிடைத்துவிடும்!

வங்கித்தொழிலில் இவ்வாறாக இருந்த நிலைமையைத் தொடர்ந்தே தனிப்பட்ட வங்கிகள் அனைத்தையும் பர்மிய சர்க்காரின் இந்த நடவடிக்கையை எல்லா தொழிற் சங்கங்களும் வரவேற்றுள்ளன. (ஏ. ஏஎன்எஸ்)

# "விஞ்ஞான பாடங்களை சிங்களத்தில் போதிக்கவேண்டும்"

—ஸ்ரீ சிவாலிதேரோ

கொழும்பு, ஞாயிறு "சலுகைகள் குறைந்த ஏழைப்பெற்ரோரின் குழந்தைகள், பணக்காரப் பெற்ரோரின் குழந்தைகளின் தகுதிக்கு வந்துவிடுவார்கள் என்ற காரணத்தினுல்தான், விஞ்ஞானத்தை ஆங்கிலத்தில் போதிக்கும்படி கேட்கிறார்கள். விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் போதிக்கவேண்டுமென்ற முடிவின் இரகசியம் இதுதான்."

வித்தியாலங்கார பல்கலைக் கழக சிங்களச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில், வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஸ்ரீசிவாலிதேரோ பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஒருசிலரைக் காப்பாற்றுவதா அல்லது லட்சக்கணக்கான மக்களின் உரிமைகளைக் கொடுப்பதா அரசாங்கத்தின் கடமையென்றும், இதுசம்பந்தமான விஷயத்தில் பிரதமர் உறுதியுடன் இருக்கவேண்டுமென்றும் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "நாட்டின் கல்விக்கொள்கை நாட்டின் மொழிக்கொள்கையுடன் ஒத்துவரக்கூடியதாக இருக்கவேண்டும் தேசிய கல்விக் கமிஷனின் சிபார்சுகள், இக்கொள்கைகளின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன.

1945-ம் ஆண்டு முதல் 1956ம் ஆண்டுவரை, சிங்களமொழி உபயோகத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. 1956-ம்ஆண்டில் துரிதமுன்னேற்றம் காணப்பட்டது. உயர்தரக்கல்வியால் சிங்களமொழி இடம் பெற்றதுடன் பல உயர்தர பாடசாலைகளும் இக்கொள்கையைக் கடைப்பிடித்து வந்தன.

கிராமப்புறப் பகுதிகளைச் சேர்ந்த சில மாணவர்கள்,

(5-ம் பக்கம் பார்க்க)

### ஐயாறன் எழுதுவது

அடுத்த மாதம் சத்தியாக்கிரகம் ஆரம்பமாகுமா? இதுபற்றி தமிழரசுக் கட்சியே எவ்வித திட்டமான முடிவும் இன்னும் செய்யவில்லையாம். இதுபற்றி நன்கு ஆலோசனை செய்து வருவதாயும், அதன் பிறகே ஒரு முடிவு செய்யப்படுமென்றும் திருக்கோணமலை எம். பி. கூறுகின்றார்.

ஆனல் கொழும்பிலே சில தினசரிப் பத்திரிகைகள், அடுத்த மாதம் முதல் வாரத்தில் சத்தியாக்கிரகம் ஆரம்பிககப்போவதாகச் செய்தி வெளியிட்டுள்ளதைக் கண்டேன். ஆதாரமற்ற இவ்வித செய்திகளை, பொறுப்புள்ள பத்திரிகைகள் வெளியிடலாமா? வகுப்பு வெறியைக் கிளப்பிவிட்டு, மக்கள் அமைதியாக வாழமுடியாதபடி இவ்வித செய்திகள் வெளியிடுவது இச்சமயம் ஆபத்தான விஷமமாகாதா? இம்மாதிரிப் பத்திரிகைக்காரரிடமிருந்து பொதுமக்களையும் நாட்டையும் இறைவன்தான் காக்கவேண்டும்.

* * *

தமிழரசுக் கட்சியை ஆதரிக்கும் ஓர் அன்பரை இதுபற்றிக் கேட்டேன். சில வருடங்களுக்கு முன்னுல் அவர் சமஷ்டிக் கொள்கையை எதிர்த்தும் வந்தாராம். தமிழரில் நூற்றுக்கு 90 பேர் அச்சமயம் யு. என். பி. யை ஆதரித்து வந்ததாயும், தனிச் சிங்கள சட்டத்தை, சுதந்திரக் கட்சியும், யு. என். பி. யும் சேர்ந்து நிறைவேற்றியதைக் கண்டபின்தான், தாம் தமிழரசுக் கட்சியை ஆதரிக்க முற்பட்டதாகவும், இப்பவும் கூட மொழி விஷயமாக, தமிழரின் மானத்தையும் சுயமரியாதையையும் காக்க, ஏதும்செய்யப்படுமாயின், சமஷ்டிககொள்கைபற்றித் தாம் கவலைப்படப் போவதில்லையென்றும், அடிப்படை மனித உரிமைகள் கிடைக்கவேண்டுமென்றும் கூறினர்.

* * *

கொழும்பு "அப்ஸர்வர்" பத்திரிகையில் அரசியல் நிருபர் இதுபற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். "இலங்கை அரசியலிலே ஒரு பெரிய குறை உள்ளது. சிறுபான்மையோரின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமெதையும் அளிக்கவில்லை. இந்தியாவில் தலைவர்கள், இவ்வித அடிப்படை உரிமைகளை ஆரம்பத்திலேயே அரசியல் திட்டத்தில் சேர்த்துவிட்டனர். இதைப் பின்பற்றி, பெரிய பண்டாரநாயக்காவும், அரசியல் திட்டத்தைத் திருத்தி அமைக்கவும், அடிப்படை மனித உரிமைகளைச் சேர்க்கவும் ஒரு தனிக் கமிட்டியை நியமித்தார். ஆனல் துரதிருஷ்டவசமாக நீண்ட தவக்கம் செய்யப்பட்டுவிட்டது"என்று கூறி, தமிழர்கள் மானத்தைக் காக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காவிடில் அவர்களுக்குள்ள மனக்கசப்பிலே, விரும்பத்தகாத எவ்வித யோசனையும் வளரும் என்று பொருள்பட எழுதியுள்ளார்.

* * *

மீண்டும் சத்தியாக்கிரகம், தடியடி, மண்டை உடைப்பு இதெல்லாம் வேண்டுமென்று எந்தத் தமிழரும் விரும்பமாட்டார். சென்றமுறை அவசரகாலச் சட்டம் பிறப்பித்த இரவிலே, நண்பருடன், யாழ்ப்பாண ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்த பயங்கரக் காட்சிகளை என்னல் இன்னும் மறக்க முடியவில்லை. வகுப்புக் கலகத்திலே நடந்த அக்கிரமங்களை நினைத்தாலே எந்த தேசாபிமானியும் வெட்கித் தலை குனியவேண்டும்.

தமிழரின் ஒத்துழைப்பு இல்லாவிடில் நாடு முன்னேற முடியாதென்பதை அரசாங்கமும் உணர்ந்திருக்கும்.

ஆகவே பழைய சோகக் கதைகள் மீண்டும் ஏற்படாமல் தடுக்க, தேசாபிமானமுளம்

(5-ம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞான பாடங்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞான பாடங்களை சிங்கள மொழியில் பயின்று, கொழும்பு ரோயல் கல்லூரி மாணவர்களின் தரத்துக்கு வந்துள்ளனர். இந்தக்கிராமப்புறமாணவர்கள் திறமைசாலிகளாகக் காணப்பட்டனர். இப்படியான நேரத்தில், விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் போதிக்க வேண்டியது எதற்காக? சலுகை குறைந்த மாணவர்கள் பணக்கார குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களின் தரத்தைப் பிடித்துவிடுவார்கள் என்பதே இதன் இரகசியம்.

விஞ்ஞான ஆசிரியர்களின் பற்ருக்குறைவை விரைவில் நீக்கிவிடலாம். மூன்று பல்கலைக் கழகங்களிலும் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதன் மூலம், விஞ்ஞான ஆசிரியர்கள் பற்ருக்குறைவு நீங்கிவிடும்.

விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் போதிப்பதன்மூலம் கல்விக்கொள்கையை அரசாங்கம் அழிப்பதாகவே முடியும். தனது கொள்கையை அழிக்க அரசாங்கம் தயாராகவிருக்கிறதா? விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் போதிக்க வேண்டுமென்று சில பெற்ரோர் விரும்புகிருர்களாம். அப்பெற்ருர்கள் கறுவாககாட்டைச் சேர்ந்தவர்களே.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி

அரசியல் தலைவர்கள் முன்வருவார்களா? அரசாங்கக் கட்சியை ஆதரிக்கும் ஒரு சில தமிழர்கள் இதுபற்றி என்ன செய்யப்போகிருர்கள்? இந்த ஒரு விஷயத்திலாவது, தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட முடியாதா?

* * *

பகதர்கள் சித்தத்தே பாலித்தானை, பவளக கொழுந்தினை மாணிககத்தின், தொத்தணைத்து நெறியாய் நின்ருன் தன்னை சொல்லுவார் சொற்பொருவின் தோற்றமாகி, வித்தினை முளைககிளையை வேரைக கீரை வினைவயத்தின் தன் சார்பை வெய்ய தீர்ககும், அத்தனை ஆவடுதண் துறையுள் மேய அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே.

—திருநாவுக்கரசர்

## இலங்கை-ஈரான் வர்த்தகஸ்தம்பிதம்

கொழும்பு, ஞாயிறு

இலக்கை-ஈரான் தேயிலை வர்த்தகம் கடந்த ஜனவரி மாதம்முதல் ஸதம்பித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

தேயிலை இறககுமதியாளர் இதுகம்பந்தமாகத் தெரிவிக்கையில், இலங்கைத் தேயிலை பெறுவதற்காக லைசென்ஸுகளை ஈரான் தடுத்துள்ளதென்றும்,1961-ம்ஆண்டில் இலங்கையும் ஈரானும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இலங்கை நடக்கவில்லை என்பதுதான் இதற்குக் காரணம் என்றும்கூறினர்கள். 1961-ம் ஆண்டு உடன்படிக்கையின்படி, இலங்கை 100,000 பவுண் பெறுமதியான ஈரான் பொருட்களை வாங்கவேண்டும் என்றும் அவர்கள் கூறினர்கள்.

## குவாட்டி மாலாவில் சண்டை

லண்டன். மார்ச் 24

குவாட்டிமாலாவிலுள்ள வடக்குப் பகுதியில் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு தந்தி, டெலிபோன் வசதிகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், கிளர்ச்சிக்காரருக்கு உதவி புரிய வேண்டாமென்று அரசாங்கம் குவாட்டிமாலா நகர மக்களைக் கேட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குவாட்டிமலாவின் வடக்குப் பகுதியில் நாசவேலைகள் நடைபெறுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

## பிரிட்டனுக்கு இந்திய தேயிலை

லண்டன், மார்ச் 22

கடந்த ஜனவரி மாதத்தில் வெளிநாடுகளிலிருந்து பிரிட்டனில் மொத்தம் 5 கோடியே 26 லட்சம் ராத்தல் தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது, போன ஆண்டு இதே மாதத்தில் 6 கோடியே 35 லட்சம் ராத்தல் தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது.

கடந்த ஜனவரி மாதத்தில் இந்தியாவிலிருந்து 2கோடியே 82 லட்சம் ராத்தல் தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது போன வருட ஜனவரி மாதத்தில் 4 கோடியே 15 லட்சம் ராத்தல் தேயிலை இறக்குமதியாகியது. ஆனால் இந்த வருட ஜனவரியில் மேற்கூறியவாறு குறைந்துள்ளது. இந்தத் தகவல்களை பிரிட்டிஷ் வர்த்தக போர்டு தெரிவித்துள்ளது.

## பண்டைக்கால நாணயங்கள்

லக்னோ, மார்ச் 24

வரலாற்றுச் சிறப்புக் கொண்ட அரிய நாணயங்கள் உத்தரப்பிரதேசத்தின் பல பாகங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகப்பட்ட அரிய 34 நாணயங்களில், முகம்மதுபின் துக்களக்தன் தந்தையின் பெயரால் குவட்பாபாத் என்னும் இடத்தில் அச்சடித்து தங்கமொகரா கிடைத்தற்கரியதாகும்மேற்படி 34 நாணயங்களில் 29 பொற் காசுகளும், 4 வெள்ளிப் பணமும், ஒரு செப்புக்காசும் அடங்கும். பருக்கா பாத்திலுள்ள பிப்ரகோவான் கிராமத்தில் இவையனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டன.

கர்சப்பண எனப்படும் சின்னங்களைத் தாங்கிய 39 தொலையடையாளமிட்ட நாணயங்கள் கான்பூரிலுள்ள ஹதுமா கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டன.

கன்னேஜின் மன்னனை ஆதிவர்ஷ போஜதேவரின் 545 வெள்ளி நாணயங்கள் பாரைச்சியிலுள்ள சுளெலி என்னும் கிராமத்தில் அகப்பட்டன. செப்பமில்லாத இந்நாணயங்களினென்றின் முகப்பில் விஷ்ணுவின் உருவமும், மறுபுறத்தில் ஸ்ரீமத் ஆதிவராகக் கதை வரைவுகளும் காணப்படுகின்றன.

கி. பி. 3-ம் நூற்ருண்டில் வடநாட்டில் பத்மாவதி, காந்திபுரி, மதுரா ஆகிய இடங்களில் செல்வாக்குடன் வாழ்ந்துவந்த நாகர்களைச்சேர்ந்தவை யென்று கருதப்படும், 7633 சின்னஞ்சிறு செப்புக்காசுகள் ஜான்சியைச் சேர்ந்த ஜனூரிபுஜர்க் என்னும் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டன. இந்நாணயங்கள் 'காகினி' என அழைக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் 36 குன்றுமணி எடையிருககின்றன. இவற்றின் தலைப்புறத்தில், மயில், காளை, சக்கரம், சூலம், சிங்கம், சிவலிங்கம் ஆகிய சின்னங்கள் மறுபுறத்தில் மன்னர்களின் பெயர்களும்பட்டங்களும்பிராமி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

## இந்தி வளர்ச்சிக்கு நிதிஉதவி

கல்கத்தா, மார்ச் 22

மேற்குவங்காள ராஜ்யத்தில் இந்தி மொழி வளர்ச்சிக்காக இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 40 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்தி பேசப்படாத பகுதிகளில் இந்தி மொழியைப் பரப்புவதற்காக தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு நிதிஉதவி அளிக்கப்படும். இதுதவிர இந்தி மொழி வளர்ச்சிக்காக மான்யமும் அளிக்கப்படும். அடிப்படைப் பயிற்சி ஸ்தாபனங்களில் இந்தி மொழி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இசையாளர் வருகை

### பர்மிட் வழங்குவது பற்றித் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

இந்தியாவிலிருந்து இசைக் கலைஞர்களை வருவிக்க கடந்த வருடம் அனுமதி பெற்றவர்களுக்கே இவ்வருடமும் இந்தியக் கலைஞர்களை வருவிக்க அனுமதி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றம் இவ்வருடம் இந்திய இசைக்கலைஞர்களை வரவழைக்க வழங்கியுள்ள 8 பர்மிட்டுக்களையும் கடந்த வருடம் இந்தியாவிலிருந்து கலைஞர்களை வருவித்த 9 பேர்களில் 8 பேருக்கு இம்முறை வழங்குவதென முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றத்தின் கூட்டம் அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வட்டுக் கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கவர்னர்ஜெனரலின் யாழ்ப்பாண விஜயம் பற்றி ஆராயப்படவிருந்ததாயினும், இசையாளர் பிரச்னையை தற்போது முக்கியமானதாக இருப்பதனல் அப்பிரச்னை மட்டுமே இன்று ஆராயப்படும் என்று தலைவர் கூட்ட ஆரம்பத்தில் தெரிவித்தார் எனத் தெரிகிறது.

## எம். எல். ஏ.க்கள் நேபாவுக்கு விஜயம்

ஷில்லாங், மார்ச் 22

அஸ்ஸாம் ராஜ்யத்திலிருந்து எம். எல். ஏ.க்களைக்கொண்ட மற்ரெரு தூதுகோஷ்டி நேபா பகுதிக்கு விஜயம் செய்யும் என்று எதிர்பார்ககப்படுகிறது. இதுசம்பந்தமாக அஸ்ஸாம் சட்டசபை சபாநாயகர் ராஜ்ய கவர்னர், ராஜ்யமுதன் மந்திரி ஆகியோருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

மடந்த வருட டிசம்பர்மாதத்தில் அஸ்ஸாம் எம். எல். ஏ.க்களைக் கொண்ட தூதுகோஷ்டி ஒன்று நேபா பகுதிக்கு விஜயம் செய்தது.

## தொழிலியல் பயிற்சி வகுப்புகள்

கௌகாத்தி, மார்ச் 22

இங்குள்ள தொழில் பேட்டையில் ஏப்ரல் 1-ந் திகதி முதல் சிறுரகத் தொழில்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறும். இதனை சிறு தொழில்களுக்கான கழகம் நடத்துகிறது. மூன்று மாதப் பயிற்சி வகுப்புகளில் 10 பேரே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## 'பட்டர்' கொடுக்கப்படவில்லை

### நோயாளர் சாப்பிட மறுப்பு

ருகம, ஞாயிறு

ருகம மார்புநோய் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த சுமார் 500 நோயாளர்கள் தங்களது காலை உணவை ஆட்சேபித்து சாப்பிட மறுத்தனர். கடந்தமூன்று தினங்களாக இந்த நோயாளர்களுக்குரிய 'பட்டர்' கொடுக்கப்படாததே இதற்குக் காரணம் எனக்கூறப்படுகிறது.

ருகம மார்புநோய் ஆஸ்பத்திரியின் மாவட்ட வைத்திய அதிகாரி, இந்த நோயாளர்களை சந்தித்துப் பேசினர். ஆனல் அவர்கள் மதிய உணவையும் சாப்பிட மறுத்தனர். நோயாளர்களுக்குரிய 'கோட்டா' வீத பட்டரை வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்வதாக மாவட்ட வைத்திய அதிகாரி வாக்களித்தார்.

## திரைப்படம் தடுக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

இப்பொழுது இலங்கையின் பல இடங்களிலும் திரையிடப்பட்டுள்ள கப்பலோட்டிய தமிழன் படத்தை தடுத்து நிறுத்தி வைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றைக் கொண்ட இப்படத்தில் உணர்ச்சி யூட்டும் பல கட்டங்களிருப்பதாகவும் தமிழரசுக் கட்சியினர் நேரடி இயக்கம் ஆரம்பிகக உத்தேசித்துள்ள இச்சமயத்தில் இப்படம் தொடர்ந்து திரையிடப்படுவது உகந்ததல்லவென்று அரசாங்கத்துககுச் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## கலாசாலைத் தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புத்துறை புனிதவளனர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தினம் கொண்டாடப்பட்டது. கலாசாலை ஆலயத்தில் கலாசாலை முன்னள் அதிபர் அதி வண. வ. தி. யோகுப்பிள்ளை சுவாமி திவ்விய பூஜை நிறைவேற்றினர். சாதன, போதன கழக மாணவர்களும், கோப்பாய் மகளிர் ஆசிரியர் கலாசாலை மாணவிகளும் திவ்ய பூஜையைக் கண்டனர்.

போதன கழக மாணவர்களிடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மாலையில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## பாலர் வகுப்புகளுக்கு பயிற்சி ஆசிரியர்

கொழும்பு, ஞாயிறு

சாலர் வகுப்புக்களுக்கு இனிமேல் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள்தான் பொறுப்பாக நியமிக்கப்படுவார்கள்.

பாலர் வகுப்புக்களில் சரியான முறையில் போதிக்கப்படாத காரணத்தினல் கடைசிக் காலங்களில் இவர்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள் என்றும் இதற்கு சரியான முறையில் அவர்களுக்கு கல்வி கôபிககப்படாததே காரணம் என்றும் மாவட்ட இன்ஸ்பெகடர்கள் தெரிவித்திருந்தனர். இதைத்தொடர்ந்தேமேற்கண்ட நடவடிககை எடுககப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பாலர் வகுப்புகளுககும் தற்பொழுது பொறுப்பாகவிருககும் எஸ். எஸ். ஸி. ஆசிரியர்கள் இனிமேல் வேறு ஆரம்ப வகுப்புகளுககு பொறுப்பாக விருப்பார்கள்.

## விருந்துபசாரம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பென். பாட்ரிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த விருந்து வைபவம் சனிக்கிழமையிரவு நடைபெற்றது. பிரதம விருந்தினராக வண. பிதா சீவரத்தினம் கலந்துகொண்டார்.

## பிரதமர் விஜயம்

கொழும்பு, ஞாயிறு

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, நாளை உத்தியோகபூர்வமாக பண்டாரகமவுக்கு விஜயம் செய்வார். அங்குள்ள பாடாசலையில்,விஞ்ஞான ஆய்வு கூடமொன்றையும் பிரதமர் திறந்துவைப்பார்.

இதுசம்பந்தமாக அந்த நோயாளர்கள் தெரிவிக்கையில், தங்களுக்குரிய 'பட்டர்' கொடுக்கப் படாவிட்டால் சாகும்வரை உண்ணவிரதம் இருக்கப்போவதாகக் கூறினர்கள்.

அரசாங்கத்தின் கட்டளைப்படி, ஒவ்வொரு நோயாளருக்கும் ஒவ்வொரு அவுன்ஸ் பட்டர் கொடுக்கப்படவேண்டும்.

## எம். பி.க்கள் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென்ற ஜனவரி 5-ம் திகதி வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின யாழ்ப்பாணம் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் யாழ்ப்பாணச் சில்லறை விற்பனைக் கிளையைத் திறந்துவைக்க வந்தபொழுது அமைதியான கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டஞ் செய்தபொழுது, யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு ஜே. வான்சன்டன், தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. கே. எஸ். ஒப்பாதா, உதவி இன்ஸ்பெக்டர் திரு. ரி. எச். பி. ஜெகோரன் ஆகியோர் தம்மீது பலாத்காரம் உபயோகித்ததாக ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையாவும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நேற்று திரு. டபிள்யு. அரசுவால்டன் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணக் கூட்டு மாஜிஸ்டிரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனல் அதையிட்டு சாட்சியங்கள் பதிவுசெய்ய இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டின் மீது ஒரு மாஜிஸ்டிரேட் விசாரணை செய்யலாமா என்ற கேள்வியை மாஜிஸ்டிரேட் ஆராய்ந்தே விசாரணை செய்யவேண்டுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டது. அதே பிரச்னையில் டாக்டர் நாகநாதன் வழக்கு அப்பீல்செய்யப்பட்டிருப்பதால் அதன் முடிவைக் கவனித்து இவ்வழக்கில் சாட்சியம் பதிவு செய்யவே அவகாசம் அளிக்கப்பட்டது.

இதுவரை அவ்வழக்கின் அப்பீல் முடிவு கிடைக்காதபடியாலும், திரு. வி. எம். குமாரசாமி காலித் தற்காலிக மாஜிஸ்டிரேட்டாகச் சேவையாற்றுவதாலும் வழக்கு அடுத்த மாதம் 13-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

## கூ. மொ. வி.

### துணி இறக்குமதி செய்யும்

கொழும்பு, ஞாயிறு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், 50 லட்சம் துணிகளை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருக்கிறது. சிங்கள, தமிழ் புதுவருடத்திற்கு முன்னர், இத்துணிகள் இலங்கைவந்து சேரும் என்று கூறப்படுகிறது.

## பாரதத்துக்கு நீண்ட கால உதவி

### விசேஷ கமிட்டி சிபார்சு

வாஷிங்டன், மார்ச் 24

பாரதத்துக்குக் கொடுககப்படும் அமெரிகக உதவிகள் "ரவும் நீடித்து வழங்கப்படவேண்டுமென்று அமெரிகக ஜனதிபதி கெனடியின் விசேஷ கமிட்டி சிபார்சு செய்துளளது.

அமெரிகக ஜனதிபதி திரு. கெனடியினல் நியமிகப்பட்ட விசேஷ கமிட்டி பாரதத்துககான அமெரிகக உதவிகள் பற்றி குறிப்பிடுகையில் இப்போதுள்ள சூழ்நிலையில் பாரதத்துககான அமெரிகக உதவிகள் யாவும் நீடித்து வழங்கப்படவேண்டுமென்றும் ஒரு நாட்டில் ஏற்படும் தனியார் ஸ்தாபன போட்டிககு அரசாங்கம் இடமளிககக் கூடாதென்றும் தெரிவித்துள்ளது.

விசேஷ கமிட்டியின் சிபார்சுகளை ஜனதிபதி கெனடி கொள்கையளவில் ஏற்றுக கொண்டுள்ளார்.

## கல்விமந்திரி விஜயம்

கொழும்பு, ஞாயிறு

கல்விமந்திரி ஜனப் பதியுதீன்மாமூத், நாளை குளியாபபிட்டிக்கு விஜயம்செய்வார்.

படவிமரிசனம்

# ஆடிப்பெருக்கு

ராஜா எழுதும் கவிதைத் தொகுப்புதான் 'ஆடிப்பெருக்கு' என்ற பெயரில் வெளிவருகிறது. இந்தப் புத்தக வெளியீட்டின் மூலம் செல்வந்தனுகி பெரிய இடத்தில் (தன்னைக் காதலிக்கும்ஒருத்தியை (சம்பந்தம் செய்துகொள்கிருன் ராஜா. ஆனுல் அவன் காதலித்த பத்மா கைம்பெண்ணுகி இறுதியில் ராஜாவுக்காகத் தன்னையே தியாகம் செய்துகொள்கிருள்.

இரண்டு பெண்கள் காதலிக்கும்பொழுது காதலனுக ஜெமினி கணேசன் இருந்தால் தான் நல்லாக இருக்கும் என ரசிகர்கள் விரும்புவதைத் தயாரிப்பாளர்கள் தெரிந்து வைக்காமலிருப்பார்களா? பத்மாவைக் காதலிக்கும்பொழுது அவருடைய பொய்க்கோபமும் குறும்பும் ஜெமினி தனக்கென தானே வைத்திருக்கும் காதல் (நடிப்பு) மந்திரம்!

'தனிமையிலே இனிமைகாண முடியுமா'என்ற பாட்டை, தனிமையிலே பாட துணைவேண்டும்தான் என்பதைப் பத்மா எடுத்துக் கூறுவதிலிருந்து ஆரம்பிக்கும் காதலை (கதையின்படி ஏமாற்றமடையவேண்டிவந்தாலும்) நன்ருக வளர்க்கிருர் ஜெமினி கணேசன். பத்மாவாக வரும் சரோஜா தேவி, ஜெமினிகணேசனுக்கு ஈடுகொடுத்து நடிக்கிருர். குழந்தைத்தனமாக காதலை வெளிப்படுத்துவதும் ஏமாற்றமடைந்து மனவேதனையால் துடிப்பதும் சரோஜாதேவிக்கு பழக்கப்பட்ட நடிப்பு என்பதைக் காட்டிவிடுகிருர்.

வேருெருவனை தான் மணந்துவிட்டதாக முன்னர் தன்னைக் காதலித்தவனுக்கு தெரியப்படுத்துவதற்காக தாலியைத் தொடுகிருரே, அந்தக் கட்டத்தில் நம் மனதையும் தொட்டுவிடுகிருர் சரோஜா தேவி.

தேவிகா லதாவாக வருகிருர். அவரின் நடிப்பில் மெருகிருக்கிறது. கவர்ச்சியாகத் தோன்றுகிருர். தற்காலிக தோல்வி காதலில் ஏற்படும் பொழுது இன்னும் சிறிது நடிப்பில் கவனம் செலுத்தியிருந்தால் தனது இடத்தின் முக்கியத்துவத்தை வலுப்படுத்தியிருக்கலாம்.

ராஜம்மா என்ற பெயரில் 'அம்மா' இருப்பதாலோ என்னவோ அவர் சமீபகாலப் படங்களிலெல்லாம் அம்மாவாக நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுவிடுகிருர். ஆடிப்பெருக்கிலும் ராஜம்மாதான் (பத்மாவின்) அம்மா. இது அவருக்கு கைவந்த நடிப்பு என்பதை உணர்ந்துவிடுகிருர்.

சந்திரபாபு வரும்பொழுது சிரிப்பையும் கொண்டுவருகிருர். ரப்பர் பந்துபோல் மேலும் கீழுமாகத் துள்ளும்பொழுது ரசிகர்களும் அவருடன் சேர்ந்து துள்ளுகிருர்கள்.

நெட்டை உருவத்துடன் அடியற்ற மரம்போல் ஒரு கட்டத்தில் நிலத்தில் சாயும் சந்திரபாபு பெண்களின் உதவியால் நிறுத்தப்படுகிருர். இப்படி அவர் வாய் பேசாமல் சிரிக்க வைக்கும் கட்டங்கள் பல, கடனம் தெரியும் என்று கூறி, பி. டி. சம்பந்தத்தை மேசைமேல் தூக்கி நிறுத்துவதும், கடன்காரருக்குப் பயந்து ஓடி பெண்கள் பந்தாடும் இடத்தில் மாட்டிக்கொண்டு முகத்தில் பந்தடி வாங்குவதும் நம்மைச் சிரிக்கவைக்கத் தவறவில்லை.

'தனிமையிலே இனிமைகாண முடியுமா', 'காவேரி ஓரம் கதை சொன்ன நேரம்' இனிமையாக இருக்கும் பாடல்களில் இரண்டு. கே. சங்கரின் டைரக்ஷனில் உருவான 'ஆடிப் பெருக்கு' ரசித்து சிரித்து மகிழக் கூடிய ஒரு விருந்து.

—க ச.

## திருமலைச் செய்திகள்

### அங்குரார்ப்பணம்

திருக்கோணமலை, சனி

தம்பலகமம் மேற்கு குடியேற்றவாசிகளுக்கென ஸ்தாபிக்கப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ச. பொன்னுத்துரை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். பின்வருவோர் புதிய வருடத்திற்கான நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. க.கதிரவேற்பிள்ளை, உபதலைவர்: திரு. பூபாலபிள்ளை, செயலாளர்: திரு. க. சிவசேகரம், உபசெயலாளர்: திரு. க. மார்க்கண்டு, கணக்காளர்: திரு. கா. வடிவேலு.

∴ ∴ ∴

### இடமாற்றம்

பெரியபாலம் அரசினர் முஸ்லிம் பாடசாலையில் உதவித் தலைமையாசிரியையாகக் கடமையாற்றிய திருமதி என். ஜி. ஜெயராசசிங்கம் அக்கரைச் சேனை முஸ்லிம் அரசினர் பாடசாலைக்கு அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

### புதிய தர்மகர்த்தா

திருகோணமலை ஏகாம்பரம் வீதியிலுள்ள ஸ்ரீமுருகன் கோவில் நிர்வாகசபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது இவ்வாண்டிற்கான புதிய தர்மகர்த்தாவை தெரிவு செய்வதுபற்றி நீண்டநேர விவாதம் நடைபெற்று முடிவில் திரு. க. கனகசுந்தரம் ஏகமனதாக இவ்வாண்டின் தர்மகர்த்தாவாக தெரிவு செய்யப்பட்டார்.

∴ ∴ ∴

### எம். பி. யின் முயற்சி வெற்றி

மூதூர் தொகுதியிலுள்ள அநேக பாடசாலைகளில் போதிய தளபாடம் இல்லாத குறையைப் போக்கும்படி மூதூர் இரண்டாவது பாராளுமன்றப் பிரதிநிதி ஜனப். ஏ. எல். ஏ. மஜீது கல்வியமைச்சர் ஜனப். பதியுதீன் மஹமூதைக் கேட்டுக்கொண்டதன் பயனக எல்லாப் பாடசாலைகளுக்கும் இம்மாத முடிவில் தளபாடங்கள் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

∴ ∴ ∴

### குடியேறியவர்களுக்கு காணி

சீனன்வாடிக்கு அருகாமையிலுள்ள முடிக்குரிய காணிகளைச் சுத்தம்செய்து அங்கு குடியேறியுள்ள ஏழைகளின் நிலை பரிதாபத்திற்குரியதாக இருப்பதால் அதை அந்தந்த ஏழைகளுக்கே கொடுத்துவிடும்படி மூதூர் இரண்டாவது பாராளுமன்றப் பிரதிநிதி ஜனப். ஏ. எல். ஏ. மஜீத், காணிவிவசாய மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவைக் கேட்டிருந்தார். காணி அமைச்சர் இதன் பயனக காணிக்கச்சேரி நடத்தி சட்டபூர்வமாகக் குடியேறியவர்களுக்கு அக்காணிகளைக் கொடுக்குமாறு திருமலை அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

∴ ∴ ∴

### "அடிப்படை உரிமைகள்"

"இக்காலத்திய அரசியற் திட்டங்களிலெல்லாம் அடிப்படை உரிமைகள் பற்றிய ஷரத்துக்கள் சேர்க்கப்படுகின்றன. ஆனுல் இலங்கை அரசியல் சட்டத்தில் இவை ஏனே சேர்க்கப்படவில்லை. இலங்கை அரசியற் சட்டம் மாற்றியமைக்கப்படும்பொழுது இவை சேர்க்கப்படுதல்வேண்டும்" இவ்

## "உளவளர்ச்சிமட்டும் போதாது"

### பரிசளிப்பு விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், ஞாயிறு

'இன்று மாணவர்கள் உளவளர்ச்சிக்காகக் கல்வி கற்பதோடு நின்றுவிடாது, உடல் வளர்ச்சியையும் கவனிக்க வேண்டும். உள்ளத்துடன் உடலும் வலுவுடையதாக இருத்தல் வேண்டும். உடல்நலத்திற்கு தேகப்பயிற்சி இன்றியமையாதது' என்று வலிகாமம் வடக்கு வித்தியாதரிசி திரு. ஆ. சிவகுரு நேற்றிரவு காங்கேசன்துறை அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலைப் பெற்ருர் தினப் பரிசளிப்பு விழாவில பெற்ருேர் தினப் பேருரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## "சாரங்களை இறக்குமதிசெய்யத் தேவையில்லை"

கொழும்பு, ஞாயிறு

சிங்கள, தமிழ் புதுவருடகாலத்தில் விற்பனைசெய்வதற்காக, ஒரு லட்சத்துக்கதிகமான சாரங்களையும், ஏராளமான சேலைகளையும் இங்கு இறக்குமதிசெய்யவேண்டுமென்ற கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் முடிவுக்கு எதிராக அகில இலங்கை நெசவாளர்சங்கம், பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கு நேற்று ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இப்பொழுது போதுமான சாரங்களும், சேலைகளும் இருக்கிறதென்றும் இவற்றை இறக்குமதிசெய்யத் தேவையில்லை என்றும் இச் சங்கம் பிரதமருக்குத் தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட ஏராளமான சாரங்கள் குடிசைக் கைத்தொழில் பகுதியினரிடம் இருக்கிறதென்றும், சாரங்களையும் சேலைகளையும் இறக்குமதிசெய்யவேண்டுமென்று கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் முடிவு செய்திருப்பது குறித்து உடனடியான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் இச் சங்கம் பிரதமரைக் கேட்டுள்ளது.

## மேயர் வேண்டுகோள்

கொழும்பு, ஞாயிறு

தண்ணீரை வீணுக உபயோகிக்க வேண்டாமென்றும் தண்ணீர் பாவிப்பதைக் குறைத்துக் கொள்ளும்படியும் கொழும்பிலுள்ள வரி செலுத்துவோருக்கு கொழும்பு நகர மேயர் திரு. வி. ஏ. சுகததாசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லபுகம நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 29 அடிக்குக் குறைந்துள்ளது. வரட்சி நீடித்தால் நிலைமை மோசமாகலாம் என்பதினுல்தான், வரி செலுத்துவோருக்கு மேயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

வாறு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா, ஜப்பானிய மரவேலைப்பாடுகள், சித்திரங்கள், யுனெஸ்கோ பிரசுரங்கள் பற்றிய பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

∴ ∴ ∴

### தற்கொலை

தம்பலகமம் கூட்டாம் புளியில் வதியும் மாராசாமியின் மனைவி தெய்வானைப்பிள்ளை (வயது 40) கிருமிநாசினியை அருந்தி மரணமானுர். தம்பலகமம் மரணவிசாரணை அதிகாரி திரு. பூபாலபிள்ளை தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## செய்தித் திரட்டு

### சுசந்தாவின் சடலம்

பாணந்துறை, ஞாயிறு

ஜப்பானில் இலங்கைத் தூதராக கடமையாற்றி சென்ற வாரம் காலமான சர். சுசந்தா டி' பொன்சேகாவின் சடலம் விசேஷ ஜப்பான் விமானத்தில் செவ்வாய்க்கிழமை இலங்கைக்குக் கொண்டுவரப்படும்.

∴ ∴ ∴

### 'கண்தானம்செய்ய 13,000 பேர் தயார்'

தெஹிவளை, ஞாயிறு

இறந்தபின்னர் தங்களது கண்களைத் தானம்செய்ய, 13,000 இலங்கையர்கள் ஆயத்தமாகவிருக்கின்ருர்கள் என்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில், அகில இலங்கை கண்தான சங்கத்தின் காரியதரிசி டாக்டர் ஹட்சன் சில்வா கூறினர்.

∴ ∴ ∴

### வாழ்த்துச்செய்தி

கொழும்பு, ஞாயிறு

பாகிஸ்தானின் தேசியதினத்தை முன்னிட்டு, இலங்கைப் பிரதமர், பாகிஸ்தான் ஜனதிபதிக்கு நேற்று வாழ்த்துச் செய்தி அனுப்பினர்.

∴ ∴ ∴

### 'கவலைவேண்டாம்'

கொழும்பு, ஞாயிறு

சிங்கள, தமிழ் புதுவருடகாலத்தில், போதுமான உணவுப்பொருள்கள் கைவசமிருக்குமென்றும், மேலுமதிகமான உணவுப் பொருள்கள் விரைவில் இங்குவந்து சேரும் என்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் உணவுப்பகுதி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

∴ ∴ ∴

### 'செய்தி தவறு'

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக்கு விஜயம் செய்த சீன வர்த்தகத் தூதுகோஷ்டி அங்கத்தவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 10,000 அமெரிக்க டாலர்களும் சுங்கப்பகுதியினரால் திருப்பிக்கொடுக்கப்படும் என்று பத்திரிகைகளில் வெளியான செய்தி முற்றிம் தவருனது என்று நிதிஅமைச்சு அறிக்கையொன்று கூறுகிறது.

∴ ∴ ∴

### முன்னுள் விதானைக்கு தண்டனை

மாத்தறை, ஞாயிறு

எஸ். எல். எம். ஹசன் என்பவரைத் தாக்கிய குற்றத்துக்காக, கொடப்பிட்டியா முன்னுள் கிராமத்தலைமைக்காரர் ஏ. எஸ். எம். சாபி என்பவருக்கு மாத்தறை மாஜிஸ்டிரேட் மூன்றுமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

∴ ∴ ∴

### கருத்தரங்கம்

குருநாகலை, ஞாயிறு

அன்கன்கல பாடசாலையில் சுகாதார கருத்தரங்கத்தில், சுமார் 100 ஆசிரியர்கள்கலந்து கொண்டனர்.

∴ ∴ ∴

### காட்டுயானைக் கூட்டம்

பிங்கிரியா, ஞாயிறு

வெல்லன்கிரியா, ருவாநெலியா, நரியகாம, சிப்பிகலேன், ரகுபிபிட்டியா ஆகிய பகுதிகளிலுள்ள நெல்வயல்களையும், தோட்டங்களையும் 18 காட்டு யானைக்கூட்டமொன்றுஅழித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த யானைக் கூட்டம், இதுவரை 20 ஏக்கர் நெல்வயல்களையும், 20 ஏக்கர் தென்னந்தோட்டங்களையும் அழித்துள்ளதாம்.

∴ ∴ ∴

### வயர் திருட்டு

யக்கலை, ஞாயிறு

அத்தனகலை —ஹன்வெல பாதையில், ரூ. 364 பெறுமதியுள்ள 182 ருத்தல் தந்திக் கம்பிகள் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜி. ஸி. ஈ. தராதரப் பத்திரம்

கொழும்பு, ஞாயிறு

கடந்த ஏழு வருட காலத்தில் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த 160,000-க்கு அதிகமான ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சார்த்திகளுக்குரிய தராதரப் பத்திரங்களை பரீட்சை பகுதி தபால்மூலம் அனுப்பியுள்ளது. கடந்த ஏழுவருட காலத்தில் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், தங்களது தராதரப் பத்திரங்களை சில நாட்களில் பெறுவார்கள்.

இது சம்பந்தமாக பரீட்சைப் பகுதியைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில், ஜி. ஸி. ஈ. பரீட்சைக்குரிய தராதரப் பத்திரங்களை அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பல கண்டனங்கள் வெளியானதென்றும் இது சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் அதிக நேரம் வேலை செய்தார்கள் என்றும் 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் அதற்குப் பின்னரும் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு, தராதரப் பத்திரங்கள் கிடைக்காவிட்டால், அவர்கள்,பரீட்சைப் பகுதியினருக்கு உடனடியாக அறிவிக்கவேண்டும் என்றும் கூறினர்.

## சோவியத் எண்ணெய்க் கப்பல் தீப்பற்றியது

பெல்கிரேட், மார்ச் 24

பெல்கிரேட்டுக்கு அருகில், சோவியத் எண்ணெய்க் கப்பல் ஒன்று தீப்பற்றி, குண்டு வெடிப்பதுபோல் வெடித்தது. இதன் காரணமாக வேறு இரண்டு எண்ணெய்க் கப்பல்களும் தீப்பிடித்தன. மூன்று கப்பல்களிலும் இருந்த மாலுமிகள் தப்பித்துக்கொண்டனர். ஆனுல் ஒருவர் மட்டும் காயமடைந்துள்ளார். இது சம்பந்தமாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவிக்கையில், எண்ணெய்க் கப்பல் வெடித்ததும், கடல் முழுவதுமே தீப்பற்றி எரிவதாகக் காணப்பட்டது என்று கூறினர்.

## திருமலை வாடிவீடு

திருக்கோணமலை, ஞாயிறு

இங்கு விஜயம் செய்யும் உல்லாசப் பிரயாணிகளுக்கு மலிவான, சாப்பாடும் இடவசதியையும் கொடுக்கும் திருக்கோணமலை வாடிவீட்டில், கடந்த சில மாதங்களாக சில ஸ்தலஸ்தாபன அரசாங்க ஊழியர்கள் தங்கியுள்ளனர். திருக்கோணமலை வாடிவீட்டில் தங்குவதற்கு வரும் பல உல்லாசப் பிரயாணிகள், வாடிவீட்டில் போதிய இடவசதியில்லாது திரும்புகின்றனர்.

## ஐக்கிய முன்னணியின் அடுத்த கூட்டம்

கொழும்பு, ஞாயிறு

இடதுசாரிக் கட்சி ஐக்கிய முன்னணியின் அடுத்த மாபெரும் கூட்டம் புதன்கிழமை மாலை பேலியகொடையில் நடைபெறும்.

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு. பீட்டர் கெனமன், டாக்டர் என். எம். பெரேரா, திருமதி விவியன் குணவர்த்தன, திரு. பிறின்ஸ் குணசேகரா ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## போக்குவரத்து தடை

கொழும்பு, ஞாயிறு

கொழும்பிலிருந்து 14 மைல் தூரமுள்ள பொல்கஸோவித்த என்ற இடத்தில் சுமார் 500 கிராம மக்கள் பஸ்போக்குவரத்துக்கு இடையூறுசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள்,வீதியை மறித்து நிற்பதால் சுமார் 16 பஸ்கள் நேற்று தடைப்பட்டன.

# 'யாழ்ப்பாணக் கட்டழகன்' இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

'யாழ்ப்பாண கட்டழகன்' (மிஸ்டர் யாழ்ப்பாணம்) போட்டி இம்மாதம் 30-ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

'எஸ்குயர்ஸ்போர்ட்ஸ் கிளப்' ஒழுங்கு செய்யும் இப்போட்டியில் 'யாழ்ப்பாணக் கட்டழகன்' கனிஷ்ட, சிரேஷ்ட என இருவர் தெரிவு செய்யப்படுவர்.

30-ந் திகதி நடைபெறும் இறுதிப்போட்டியில் 'கனிஷ்ட கட்டழகன்' போட்டியில் வி. செல்லத்துரை, எஸ். குலசிங்கம், ஏ. கணபக்தன், டி. பாலசிங்கம், ஏ. இலங்கராஜா என். சற்குணராஜா, வி. அழகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிரேஷ்ட போட்டியில் கே. சகாதேவன், எஸ். சின்னச்சாமி, எம். ஏ. தியாகராஜா, ஏ. திருமேனி, ஈ. எஸ். கந்தசாமி, ஏ. டி. சபாரத்தினம், பி. எம். குணனந்தன், கே. அழகு, ஏ. நல்லையா, ஏ. எல். எம். அப்துல்காதர், ஆகியோர் கலந்துகொள்வர்.

சனிக்கிழமை நடைபெறும் சட்டழகன் தெரிவு வைபவத்தில் விளையாட்டுத்துறையில் இலங்கையிலும் வெளிநாடிலும் புகழ் ஈட்டிய திரு. என். எதிர்வீரசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வர். பாக்குநீரிணையை நீந்திக்கடந்த வீரர்கள் ஏ.நவரத்னசாமியும், விவேகானந்தராஜா ஆனந்தனும் இந்த வைபவத்தில் சமூகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.




சே. துரைசிங்கம்

இலங்கை கட்டழகனும் 'உலக ஆணழகன்' போட்டியில் மூன்றாவதாக வந்தவருமான திரு. ஆர். எஸ். எல். ஸ்டெயின் வால் இவ் வைபவத்தில் உடற்பயிற்சிகள் சில வற்றைச் செய்துகாட்டுவர். பேட்ரம் பெரேரா, அமால் கோமஸ் ஆகியோரின் உடற்பயிற்சிக் காட்சியும் 'பாண்ட்' வாத்தியம் மற்றும் பல நிகழ்ச்சிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.



பேட்ரம் பெரேரா, அமால் கோமாளின் உடற்பயிற்சிக் காட்சி



இலங்கை கட்டழகன் ஆர். எஸ். எல். ஸ்டெயின்வால்

# வட்டுக்கோட்டைத் தொகுதி பாடசாலை உடற்பயிற்சிப்போட்டி

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை தொகுதிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் இருபதுக்கு மேற்பட்ட பாடசாலைகள் கலந்து கொண்டன. போட்டி முடிவில் வட்டார வித்தியாதிகாரி திரு எஸ். சபாபதி பேசுகையில், உடற் பயிற்சி போட்டிகள் போட்டிக்காக மட்டும் இருக்காமல் ஒவ்வோர் மாணவனுக்கும் கட்டாயமாக இருக்க வேண்டும் என்றும் இடையறாத முயற்சி வெற்றியைக்கொடுப்பதுடன் நல்ல பண்புள்ளவனாக வாழப் பழகுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றதென்றும் கூறினர்.

போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

**'ஏ' பிரிவு ஆண்**

1. காரைநகர் இந்துக் கல்லூரி.

**'பி' பிரிவு ஆண்**

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை, 2 சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை, 3. வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த பாடசாலை.

**'பி' பிரிவு பெண்**

சங்கானை சிவப்பிரகாசவித்தியாசாலை, 2. பண்டத்தரிப்பு றோமன் பாடசாலை, 3. அராலி தெற். மேற்கு முருகமூர்த்தி பாடசாலை.

**16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு**

சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை, 2. பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை, 3. சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை.

**13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு**

1. காரைநகர் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, காரைநகர் யாழ்டன் கல்லூரி.

சாவகச்சேரித்தொகுதி

# உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி வட்டார வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி விளையாட்டுக்கள் மட்டுவில் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி வட்டார வித்தியாதரிசி திரு. வி. முத்துலிங்கம் தலைமையில் இப்போட்டி விளையாட்டுக்கள் நடைபெற்றபோது தென்மராட்சியில் உள்ள பாடசாலைகளின் மாணவர் 1500 பேருக்கு அதிகமானோர் பங்குபற்றினர்.

யாழ்ப்பாண மாவட்ட உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு. பி. ஈ. இராசேந்திராவும் வட்டார உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு. ஆர். எஸ். சீவரத்தினமும், திருமதி பி. குகதாசனும் போட்டி ஒழுங்குகளைக் கவனித்தனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற பின்வரும் பாடசாலைகள் இம்மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றவிருக்கின்றனர்.

'பி' பிரிவு 13 வயதின் கீழ்—**பெண்கள்:** கைதடி எருதிடல் அரசினர் தமிழ்ப் பாடசாலை, மீசாலை விக்னேஸ்வர வித்தியாசாலை, அல்லாரை வெள்ளாம் போக்கட்டி அரசினர் தமிழ்ப் பாடசாலை.

'பி' பிரிவு 16 வயதின் கீழ்—**பெண்கள்:** மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, மீசாலை விக்னேஸ்வர வித்தியாசாலை, கொடிகாமம் அரசினர் தமிழ்ப் பாடசாலை

'பி' பிரிவு 19 வயதின் கீழ்—**பெண்கள்:** மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை, மீசாலை விக்னேஸ்வர வித்தியாசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை.

'பி' பிரிவு 13 வயதின் கீழ்—**ஆண்கள்:** கைதடி எருதிடல் அரசினர் தமிழ்ப் பாடசாலை, மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, மீசாலை விக்னேஸ்வர வித்தியாசாலை.

'பி' பிரிவு 16 வயதின் கீழ்—**ஆண்கள்:** மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை.

'பி' பிரிவு 19 வயதின் கீழ்—**ஆண்கள்:** மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை.

'ஏ' பிரிவு 13 வயதின் கீழ்—**பெண்கள்:** உசன் மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் வித்தியசாலை.

'ஏ' பிரிவு 16 வயதின் கீழ்—**பெண்கள்:** நாவற் குழி மகா வித்தியாலயம், உசன் மகாவித்தியாலயம்.

'ஏ' பிரிவு 19 வயதின் கீழ்—**பெண்கள்:** சாவகச்சேரி அரசினர் மகளிர் வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மட்டுவில் மகா வித்தியாலயம்.

'ஏ' பிரிவு 13 வயதின் கீழ்—**ஆண்கள்:** உசன் வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

'ஏ' பிரிவு 16 வயதின் கீழ்—**ஆணகள்:** மட்டுவில் மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உசன் மகா வித்தியாலயம்.

'ஏ' பிரிவு 19 வயதின் கீழ்—**ஆண்கள்:** உசன் மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மட்டுவில் மகா வித்தியாலயம்.

வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு வித்தியாதரிசி திரு. வி. முத்துலிங்கம் சான்றிதழ்களை வழங்கினர்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## திங்கள் 25-3-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை. 6-45 வயலின்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 தனலட்சுமி விசுவநாதன் — வீணை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 தமிழ் மூலம் சிங்களம், 9-30 தேர்ந்தஇசை, 9 45 எஸ். பாலசிங்கம் — பாட்டு.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 1-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய சங்கீதம், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 எல். என். சாமாயாஜுலு — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 புதுக்கோட்டை ஜி. ஜயம் — பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க — மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகள்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல்கள், 7-35 இலக்கிய ஏடு, 740 திரைப்படஇசை, 7-50 தபால் பெட்டி, 8-00 நமது கடமை — பேச்சு, 8-05 புதுக்கோட்டை ஜி. ஜயம் — பாட்டு, 8-30 இசைக்கோவை, 8-45 தேசபக்திப்பாடல்கள், 9-15 வெற்றிவாகை — சித்திரம், 9-30 இளைஞர்குரல் — கதம்ப நிகழ்ச்சி.

# 20 வீடுகள் சாம்பலாயின

சிலாபம், ஞாயிறு

கீறுக்குப்பொனி என்ற இடத்திலுள்ள 20-க்கு மதிகமான வீடுகள் எரிந்து சாம்பலான சம்பவம் வெள்ளிக்கிழமை நிகழ்ந்தது. முதலில் ஒரு ஓலைவீட்டில் நெருப்புப் பிடித்ததென்றும் பின்னர் திடீரெனத் தீ எங்கும் பரவத் தொடங்கிவிட்டதென்றும் கூறப்படுகிறது.

இதன்காரணமாக 96 பேர் வீடிழந்துள்ளனர். இவர்களின் உடுப்புகள், பொருள்கள், மற்றும் பணம் யாவும் எரிந்து சாம்பலானது.

# ஹோட்டல் சுவை!

லண்டன், மார்ச் 22

வீட்டைவிட்டு கபேகளிலும், இதர உணவு வீடுகளிலும் உணவு கொள்ளும் வழக்கம் பிரிட்டிஷ் மக்களிடையே பெருகிவருகிறது. சென்றஆண்டில் மட்டும் வெளியில் உணவு கொள்வதற்காக அவர்கள் 2023 கோடி ரூபாய் செலவு செய்துள்ளனர். 1961-ம ஆண்டை விட 1962ல் 5 சதவீதம் இச்செலவு அதிகம்என்று வர்த்தக போர்டு அறிவிக்கின்றது.

# "படிக்க மறுப்பதால் சிங்களம் திணிக்கப் படுகிறது"

## கைத்தொழில் ஆசிரியர் மகாநாட்டில் உதவி வித்தியாதிபதிபேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'சிங்களம் தொடர்ந்து படிக்கப்பட்டு வந்திருக்குமானல் நாட்டில் எந்தப் பிரச்னைகளும் தோன்றியிருக்க மாட்டாது. நமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள ஒரு சில குறைபாடுகள் நமது முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன. பிறமொழியான ஆங்கிலம், பாளி போன்ற பாஷைகளைப் படிக்கும் நாம் நமது நாட்டில் பேசப்படும் சிங்களத்தைப் படிக்கமாட்டோம் என்று கூறி வருவது விந்தையாக் உள்ளது. சிங்களம் படிக்க நாம் மறுக்கும் அதே சமயம் சிங்களத்தைத் திணிக்கும் முயற்சிகள் வலுவடைந்து வருகின்றன என்பதனையும் எண்ணவேண்டும்' என்று வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் வடபகுதி கல்விப்பகுதி கைத்தொழில் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். யாழ்ப்பாணம் பாரதி பாஷிய பாடசாலையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. சி. உ. சோமசேகரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பாடசாலைகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் செய்யும் பலனை பெற்ரூர்களும் மாணவர்களும் சரியாக உணரவில்லை. கைத்தொழில் ஆசிரியர்கள் தமது திறமையை வெளிப்படுத்த வேண்டும். உலகம் பசியில் சிக்கயிருக்கிது. முற்போக்கான தொழிலாளர்களாக ●ர கைத்தொழில் ஆசிரியர்கள் விரும்பவில்லை. இத்தகைய நிலையிலே தான் இவர்களுடைய சம்பள விஷயத்தை அரசாங்கம் கவனிக்காமலுள்ளது. முற்போக்கு எண்ணமுடையவர்களாக இருக்கவேண்டும். நாட்டிற்கு உதவி செய்யும் எம்மால் நாட்டுக்குப் பயன் கிடைக்கிறது என்பதனை மக்களுக்கு உணர்த்தவேண்டும்.

நமது பாடசாலைத் திட்டத்தில் கைத்தொழில் திட்டம் முன்னேறவில்லை. இதனல் தான் சமூகம் முன்னேறவில்லை. நமது மக்கள் கைத்தொழில் மனப்பான்மையற்றவர்களாக இருப்பது வருந்தத்தக்கது. மேலைநாடுகளில் இத்தகையநிலை இல்லை. தொழிற்சிப்பந்திகள் தொழிலில் ஆர்வமில்லாதிருத்தல் கூடாது. தொழிலில் திறமை பெற்ற ஆசிரியர்கள் தமது தொழிலில் நல்ல வருவாயைப் பெற முடியும்.

சிறிய விஷயங்களில் காட்டும் ஆர்வம் முன்னேற்றத்திற்கு அடி கோலும். நாட்டில் உள்ள மூலப்பொருள்களை ஆராய்ந்து செயல்படவேண்டும். கைத்தொழில் ஆசிரியர்கள் தமது தொழிலுக்கு உரிய மதிப்பைக் கொடுக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு தொழிலில் திறமையும் மற்றைய தொழில்களும் தெரிந்தெடுக்கவேண்டும்.

### கைத்தொழில் தான் முன்னேற்றம் தரும்

சகிப்புத்தன்மை இல்லாதவர்களாக இருக்கின்றோம். தொழிற் கல்வி பேச்சளவில் மட்டுமேயன்றி செயலளவில் இல்லை. எமது பகுதிகளிலே கூட உத்தியோகம் இல்லாத நிலை உருவாகி வருகிறது. நமது சமூகம் கைத்தொழிலினல் தான் முன்னேற்றமடைய முடியும்.

கைத்தொழிலில் நஷ்டத்தை முதலில் கவனிக்காமல் லாபத்தைப் பெருக்கவேண்டும். ஆசிரியர்கள் எந்த விஷயத்திலும் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். கைத்தொழில் ஆசிரியர்கள்தத்தமது பாடசாலைகளில் தமது திறமைக்கேற்ப பொருள்களைச் செய்து அழகு படுத்தி பிறரிடம் நன்மதிப்பைப் பெற முமுயும்.

திரு. சே. சோமசுந்தரம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

கைத்தொழில் ஆசிரியர்கள் அனதைகளாக உள்ளனர். அவர்களைக் கையேற்று உதவி புரிய எவரும் முன்வரவில்லை. தொழிற் கல்வி ஆசிரியர்கள் ஆரம்பநிலையிலேயே உள்ளனர்.

காரியதரிசி, தனதிகாரியின் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப் பட்டன.

## கொழும்பு மேயர் சுகததாசா

### யாழ்ப்பாணம் வருகிருர்

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புநகரமேயர் திரு.வி. ஏ. சுகததாசா இம்மாதம் 30-ந் திகதி யாழ்ப்பாணம் வருகிருர். தமிழ்மொழிக்கும் நிர்வாகத்தில் இடமளித்த கொழும்பு நகரசபையின் மேயர் யாழ்ப்பாணம் வரும்பொழுது அவருக்கு வரவேற்பு உபசாரம் அளிப்பது பற்றிய யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தவர்கள் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் உதைபந்தாட்டப் போட்டியொன்றில் கலந்து கொள்ளவரும் கொழும்பு மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கு மேயர் சுகததாசா தலைமை வகித்துக்கொண்டு வருகிருர். இந்த உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 30-ந் திகதி பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

## நாஸருக்கு சிறிமா கடிதம்

கெய்ரோ, மார்ச் 24

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா எழுதிய கடிதமொன்று இன்று ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸரிடம் கொடுக்கப்பட்டது. கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதர் இக்கடிதத்தை ஜனதிபதி நாஸரிடம் கொடுத்தார். சீன-இந்தியத் தகராறு சம்பந்தப்பட்டதுதான் இக் கடிதம் என்று இலங்கைத் தூதர் கூறினர். ஆனல் கடிதவிபரம் பற்றி அவர் எதுவும் வெளியிடவில்லை.

## மரண அறிவித்தல்

ஆறுமுகம்-சபாரத்தினம் உடுவிலைச் சேர்ந்தவரும் இணுவில் மிஷன் பாடசாலை இளைப்பாறிய தலைமை ஆசிரியை பத்தினிப்பிள்ளையின் கணவரும் ரத்மலானை ரயில்வே போர்மன் குணரத்தினம், நீர்கொழும்பு மீன்பிடி இலாகா அரியரத்தினம, புஷ்பரத்தினம் நேசராசா, பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியை சுகிர்தரத்தினம், மல்லாகம் மிஷன் பாடசாலை ஆசிரியை தேவரத்தினம், இணுவில் மிஷன் பாடசாலை ஆசிரியை சொர்ணரத்தினம், பயளரத்தினம், ராஜரத்தினம் ஆகியோரின் தந்தையுமான ஆறுமுகம் சபாரத்தினம் காலஞ்சென்றுவிட்டார். இன்றுமாலை 4 மணிக்கு உடுவில் மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

## வீரர் ஆனந்தனுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### இலங்கைக்கே பெருமை

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் ஆனந்தனின் சாதனை தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி அகில இலங்கைக்கே உரியது. இலங்கை மக்கள் அனைவரும் பெருமைப்படத்தக்க செயல் இது! என்று கூறினர்.

### துணிவினல் சாதிக்க முடியும்

பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

ஆனந்தனின் வெற்றி நமக்கு முயற்சி திருவினையாக்கும் என்பதனை உறுதிப்படுத்துகிறது. ஆனந்தனைப் போன்ற திடசங்கற்பம் நம்மிடம் இருக்குமாமானல் எதனையும் சுலபமாக சாதித்து விடமுடியும்.

ஆனந்தனின் சர்வகலாசாலை நண்பன் திரு. எஸ்.சேனரத்ன பேசுகையில், ஆனந்தனின் சாதனையை தமிழ்மக்கள் மட்டுமின்றி தென்னிலங்கை மக்களும் பெரிதும் பாராட்டுகிருர்கள் என்று கூறினர்.

வல்வை சனசமூக நிலையக் காரியதரிசி திரு. எஸ. இராமநாதன் திரு. தலைவர் கதிராமுருடிக்குரிய நியாயாதிபதி திரு. மு. இரத்தினசிங்கம், திரு. க. இராமச்சந்திரன், பருத்தித்துறை பட்டினசபைத் தலைவர். திரு. என். நடராசா, பருத்தித்துறை காரியாதிகாரி திரு. ஆர்னல்ட்,பருத்தித்துறை மாவட்டநீதிபதி திரு. அப்துல் காதர், திரு. கே. பி. ஹரன், வல்வெட்டித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அதிரூபசிங்கம் உட்படப் பலரும் பாராட்டுரை வழங்கினர்.

ஆனந்தனின் தந்தை விவேகானந்தன் ஆனந்தனின் கடந்தகால வாழ்க்கைச் சம்பவங்களை எடுத்துரைத்தார்.

ஆனந்தனுக்கு கீதாஞ்சலி திரு. வி. கே. நல்லையா வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்தார்.

ஆனந்தன் தனது வெற்றிக்குக் காரணமாயிருந்த அனைவர்க்கும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

மழை சிறுதூறலாகப் பெய்து கொண்டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை காணப்பட்ட மக்கள் மழையில் நின்று இவ்வெற்றி விழாவைக் கண்டு களித்தனர். மாலைகள் ஆனந்தனின் கழுத்தை நிறைத்தன.

திரண்டெழுந்த சன சமுத்திரம் ஆனந்தனை மங்கல வாத்தியங்களுடன் பிரதான வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்று இல்லத்தில் சேர்த்தது.

### கைதானவர்கள் முன்னர் வந்தனர்

நீச்சல்வீரன் ஆனந்தன் பாக்குநீரிணையைக் கடந்து சென்றுகொண்டிருந்த சமயம் அவருக்கு உதவியாகச் சென்று பின்னர் இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் 36 பேர் இன்று பிற்பகல் 2-15-க்கு வல்வெட்டித்துறை வந்தடைந்தனர்.

### ஒருவர் வரவில்லை

கைது செய்யப்பட்ட 36 பேரில், ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. படகில் சென்று பின்னர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 36 பேரில், ஒருவர் இலங்கைக்கு மீண்டும் செல்வதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. முன்னர் செய்ததாகக்கூறப்படும் சில குற்றங்களில் இவர் சமபந்தப்பட்டிருக்கிருர் எனக் கூறப்படுகிறது.

### பொலிஸில் ஒப்படைப்பு

இந்திய கடற்படையினர், கைதுசெய்யப்பட்ட 36 பேரையும் நாகப்பட்டினம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர், பின்னர் இவர்களை, திருத்துறைப் பூண்டி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்களில் நாலு பேர் சுங்க இலாகா பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

### 'மன்னிப்பு'

கடந்த வெள்ளிக்கிழமை மாலை விபரம் முழுதும் அறிந்த திருத்துறைப்பூண்டி பொலிஸ் உதவி சுப்ரீம்டன்ட் திரு கே. கந்தசாமி, கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களிடம் மன்னிபபுக்கேட்டு அவர்களை விடுதலை செய்தார். விபரம் தெரியாமல் கடற்படையினர் கைது செய்துவிட்டார்கள் என்று அவர் அவர்களிடம் கூறினர். பின்னர் இவர்கள் நாகப்பட்டினம் வாடிவீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வாடி வீட்டில் தங்கியிருப்பதற்கு திருத்துறைப்பூண்டிபொலிசார் ஒழுங்குகள் செய் திருந்தனர்.

## கொல்வின் வந்து திரும்பினர்

யாழ்ப்பாணம், திங்கள்

லங்காசமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரும் தெகிவளை- கல்கிசை எம். பி. யுமான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நேற்று யாழ்ப்பாணம் வந்து கட்சியின் வடபகுதிப் பிரமுகர்களுடன் இடதுசாரி ஐக்கிய முன்னணி பற்றி ஆராய்ந்து விட்டு நேற்று மாலை விமானத்தில் கொழும்புக்குத்திரும்பினர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நாடக விழா

★

30-3-63

மகாஜனக்கல்லூரி நுண்கலை மன்றம் நல்கும்

"உத்தமன் யார்?"

★

31-·-63

இலங்கை வானெலிச் சிருப்பர் குடும்ப நாடக வேலைக்காரன் புகழ் ராஜரத்தினம் குழுவினர் தரும்

(கொழும்பு, ராஜ் நகைச்சுவை நாடக மன்றம்)

"அவமானம்"

★

1-4-63

"லண்டன் கந்தையா" புகழ் சண்முகநாதன் குழுவினரின்

"எழுத்தாளன் ஆறுமுகம்"

இந்நாடகங்கள் குறிப்பிடப்பட்ட தினங்களில் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்

பிரவேசக் கட்டணம்:-

மூன்றுநாட்களுக்குமுரிய பருவச்சீட்டு ரூ. 10; 7-50; 5

தினசரி: ரூ. 5; 3; 2.

மகத்தான 2-வது வாரம்!

வீர காவியம்!!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)

மொடர்ன் (பதுளை) தீவொளி (நுவரேலியா) ஜெமினி (ஜகலை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்

★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்

சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்

சாவித்திரி குமாரி ருக்மணி

வி. நாகையா

முத்துலட்சுமி

எஸ். வி. ரங்கராவ்

ஜெமினி சந்திரா

எஸ். வி. சுப்பையா

ஏ. கருணாநிதி

டி. கே. ஷண்முகம்



மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

மனோகரா

(யாழ்ப்பாணம்)

எம். ஜி, ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி

நடித்த

தாய்சொல்லைத் தட்டாதே

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.